# ஆதாரக்கல்வி என்ருல் என்ன?

276

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 1952
MADRAS

TN3
N48
111563

மு. அருணசலம்

ஆதாரக்கல்வி வாசக வரிசை

# ஆதாரக்கல்வி என்றால் என்ன?

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 952
MADRAS

மு. அருணாசலம்

காந்தி வித்தியாலயம்
திருச்சிற்றம்பலம்
1952

முதல் பதிப்பு : 10–12–1948
இரண்டாம் பதிப்பு : 1 – 3 – 1952

விலை ரூபா ஒன்று

TN3
N48-2

111563

"எது சித்தத்தைத் தூய்மைப்படுத்தவில்லையோ, மனத்தையும் புலன்களையும் அடக்கப் பயிற்சி யளிக்கவில்லையோ, வாழ்க்கைக்கு வேண்டுவன செய்து கொள்ளும் திறமையும் அஞ்சாமையும் எதிலிருந்து உண்டாகவில்லையோ, ஜீவனத்துக்குரிய உபாயத்தை எது காட்டவில்லையோ, அடிமைத் தளையைத் தகர்த்தெறிந்து சுதந்திரமாக வாழ்வதற்குத் தேவையான துணிவும் ஆற்றலும் உண்டாகவில்லையோ, அந்தக் கல்வியில் எத்துணை அறிவுச் செல்வம் சேமித்துக் கிடந்தாலும், தர்க்கத்தேர்ச்சியும் பாஷைப் பயிற்சியும் பொதிந்திருந்தாலும், அது கல்வியாகாது, அரைகுறையான கல்வியேயாகும்."

—மஷ்ருவாலா

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை–14

# முகவுரை

ஆதாரக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கலாசாலையை நான் நடத்திவந்த காரணத்தால், "ஆதாரக்கல்வி என்றால் என்ன?" என்று என்னை அனேக ஆசிரியர்களும் பயிற்சி பெற்ற மாணாக்கரும் மற்றையோரும் கேட்டுவந்தார்கள். ஆசிரிய மாணாக்கர் பலருக்குத் தொகுதி தொகுதியாக இதுபற்றி நான் பேசியதுண்டு. ஒவ்வொரு தடவையும் ஒவ்வோர் அம்சத்தை எடுத்தே பேச முடிந்தது. கேட்போருக்குப் பூரண விளக்கம் ஏற்பட்டிருத்தல் சாத்தியமில்லை. இதை எண்ணி, எல்லா விஷயங்களையும் ஒரு சேரத் தொகுத்து, ஒரு சிறு புத்தகமாக மூன்று வருஷங்களுக்கு முன் வெளியிட்டேன். பலருக்கு அப் புத்தகம் உதவியாயிருந்தது. கொஞ்ச காலமாக அப் புத்தகம் கிடைக்காமலிருந்தது. அனேகர் கேட்டுவருவதால், மறுபதிப்பு இப்போது வெளியிடுகிறேன். இது முழுமையும் திருத்தி விரிவாக்கிய புதுப்பதிப்பு.

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| சமூக லக்ஷ்யம் | ... | 5 |
| கல்வி | ... | 8 |
| இன்றைய கல்வி | ... | 11 |
| இன்றைய பாடத்திட்டத்தின் குறைபாடு | ... | 12 |
| ஆதாரக் கல்வி | ... | 14 |
| ஆதாரக் கல்வியின் தோற்றுவாய் | ... | 15 |
| இக்கல்வியின் பெயர் | ... | 20 |
| ஆதாரக் கல்வியின் பொருள் | ... | 21 |
| இக்கல்வியின் மூல தத்துவங்கள் | ... | 22 |
| வாழ்க்கையின் தேவைகள் | ... | 27 |
| தொழிலுக்கு வேண்டிய தன்மை | ... | 29 |
| மூலப் பொருளின் தன்மை | ... | 30 |
| ஆதாரத் தொழில் - நூற்றல் ஏன் ? | ... | 31 |
| பல ஆதாரத் தொழில்கள், தொழிற்கல்வி | ... | 33 |
| தொழில்மூலம் கல்வி | ... | 35 |
| ஆதாரக் கல்வியின் பிரிவுகள் | ... | 37 |
| பாலர் கல்வி | ... | 38 |
| ஆதாரக் கல்வி - பாடத்திட்டம் | ... | 42 |
| கல்லூரிக் கல்வி | ... | 47 |
| சர்வகலாசாலைக் கல்வி | ... | 49 |
| வயதுவந்தோர் கல்வி | ... | 50 |
| 6-14 வயது | ... | 52 |
| கல்வி போதனைக்கான இடம் | ... | 53 |
| பரீக்ஷை | ... | 55 |
| செலவைச் சரிக்கட்டுதல் | ... | 57 |
| ஆசிரியர், மூவகைப் பண்புகள் | ... | 61 |
| இயைபு முறை | ... | 63 |
| ஆதாரப் பாடசாலை | ... | 65 |
| முடிவுரை | ... | 66 |

# ஆதாரக் கல்வி என்றால் என்ன?

## சமூக லக்ஷயம்

சமீபகாலத்தில் நடந்த யுத்தங்களின் பயனாய், ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் வாழ்க்கையில் புதிய மாறுதல்கள் இடம் பெற்று வந்திருக்கின்றன. கல்வித் துறையிலும் மாறுதல்கள் பல. இம்மாறுதல்களை நம் நாட்டிலும் காணலாம். புதிதாய்ச் சுதந்திரம் பெற்ற நாடு நம் நாடு. ஆதலால் இங்கு வாழ்க்கையில் பல துறைகளிலும் மாறுதல் நிகழும். இம் மாறுதலுக்கு ஏற்ப, கல்வித் துறையிலும் இங்குப் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்க இடமுண்டு.

புதியதொரு கல்வித் திட்டத்தை ஆராய முற்படுமுன், எவ்விதமான சமூக அமைப்பைத் தோற்றுவிக்க இக்கல்வித் திட்டம் வகுக்கப் பெறுகிறது என்பதை நாம் அறிதல் வேண்டும். ஆதாரக்கல்வி என்பதும், ஒரு புதிய கல்வித் திட்டம். எனவே இதற்கு அடிப்படையாக ஒரு வாழ்க்கைத் தத்துவம் அல்லது வேதாந்தம் அமைந்திருக்கிறது. இதைச் சமூகத் துறையில் நம் முன் இருத்த வேண்டிய லக்ஷயம் என்றும் சொல்லலாம். எனவே, முதலில் இந்த நமது சமூக லக்ஷயம் என்னவென்று வரையறை செய்துகொண்டு, பிறகுதான் கல்வித் திட்டத்தை அறிய முயலவேண்டும்.

காந்தியக் கல்விமுறையாகிய இவ்வாதாரக் கல்வியினால் உருவாகும் சமூகம் பின்வரும் லக்ஷணம் உடையதாயிருக்குமென்று எதிர்பார்க்கிறோம்; அல்லது நாட்டின் நல்வாழ்வில் ஆர்வம்காட்டும் நாம் எதிர்கால இந்திய சமூகம் பின்வரும் தன்மையுடையதாய் இருக்கவேண்டும் என்று கருதுகிறோம்.

1. இது சத்தியத்தையும் அன்பையும் அடிப்படையாக வைத்து நிருமாணிக்கப்பெறும். 'சத்தியமே கடவுள்'

என்பது காந்தியடிகளின் கோட்பாடு ; எம்மதமும் இதை மறுக்காது. அமெரிக்கர் ஜப்பானில் போட்ட அணுக் குண்டானது, ஒரு சிறு குண்டின் சக்தியால் பல லட்சக் கணக்கான மக்கள் அடங்கிய பெருநகரத்தை எப்படி ஒரு விநாடியில் நிர்மூலமாக்கமுடியும் என்பதைச் சந்தேகமின்றி நிதரிசனமாய்க் காட்டிவிட்டது. அணுக்குண்டைவிட ஆற்றல் வாய்ந்த ஹைட்ரஜன் குண்டு முதலியன இருப்ப தாகப் பயமுறுத்துகிறார்கள். இவற்றால் நாம் அறியவேண்டு வது, யாரிடம் அதிகமான ஆயுத பலம் இருக்கிறதோ அவரே உலகை ஆட்டி வைக்கக் கூடியவர். தருமம் சத்தியம் முதலிய பேச்சுக்கு இங்கு இடமில்லை. ஆகவே உலகத்தில் பேரரசு எதனிடம் ஆயுதபலம் மிகுதியாக இருக்கிறதோ அதற்கே வெற்றி ; முடிவான வெற்றி என் பது இல்லை. தன் ஆயுதபலம் பெரிதென்பதெல்லாம் எதிரியிடம் இதனினும் அதிக பலம் சேரும் வரையில்தான். ஆகவே ஹிம்சையும் ஆயுதபலமும் எதிர்காலத்தில் மேலும் மேலும் அழிவைத் தருமேயன்றி அழிவை நிறுத்துவதில் பய னற்றவை. சமூக வாழ்க்கையை இவை அழிக்குமே தவிர, நிலை நிறுத்தமாட்டா என்பதை நிரூபித்து விட்டன. எஞ்சி நிற்பது, ஆயுத பலத்துக்கு மாறான அன்பின் பலம் ஒன்றுதான்.

2. பலவேறு மதங்கள் இருப்பினும், சமூகமானது எல்லா மதங்களிடத்தும் சம மரியாதை காட்டுவதாயிருக் கும் ; மத வித்தியாசம் பாராட்டாது. தனி மதச்சார்பு இருக்கும். இதில் மதக் கொடுமை பிறக்காது, சகிப்பும் மரியாதையுமே பிறக்கும்.

3. இச்சமூகம் சாதி வேற்றுமை அற்றதாயிருக்கும் ; பிறப்பால் உயர்வு தாழ்வு இருக்காது ; ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் – சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற் றுமையான்’ என்ற கொள்கை நிலவும். இச்சமூகத்தில் ஆண் பெண் வேற்றுமை இராது ; பெண்ணும் ஒத்த சுதந் திர முடையவளாக வாழ்வாள்.

4. செல்வத்தால் உயர்வு என்ற நிலை மறையும் ; தொழிலால் உயர்வு தாழ்வு என்ற நிலையும் நீங்கும். மெய் வருந்தி உழைப்பது தாழ்வானது, கஷ்டப்பட்டு உழைக் காமல் சோம்பி இருப்பதாகிய மூளை உழைப்பு உயர்வு

என்ற இன்றைய நிலை மறையும். உழவு, தோட்டி வேலை, செருப்புத் தைத்தல் முதலாக, சமூக நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத எத்தொழில்களும் இழிந்தவையல்ல என்ற எண்ணம் நிலவும். எழுத்துப் படிப்புத்தான் உயர்வு என்றுள்ள போலிக் கௌரவமும் இராது.

5. நாட்டிலுள்ள மக்களில் எவரும் தம் சுதந்திரத்தை இழந்து பிறருக்கு அடிமை வேலை செய்யாமல், தம் உழைப்பினால் தம் ஜீவனத்தைக் கௌரவமாகவும் சுதந்திரமாகவும் நடத்திக் கொள்வதற்கான வசதி இருக்கும். ஒருவர் உழைக்க, மற்றவர் அவ்வுழைப்பின் பலனை அடைவதாகிய சுரண்டல் வாழ்க்கை இராது. பணம் படைத்தமை காரணமாக ஒருவர் மற்றொருவர்மீது ஆதிக்கம் செலுத்துதல் நடைபெருது. வாழ்க்கையில் போட்டி என்பது இல்லாமல், ஒருவருக்கொருவர் உதவுவதாகிய கூட்டுறவு வாழ்க்கையே இருக்கும். லாபத்துக்கென்று தொழில் செய்வதால் வரும் போட்டி இராது, போட்டி ஒருவரை வாழச்செய்து மற்றவரை அழியச்செய்யுமாதலால்.

6. நாடு முழுமையும் இன்றுள்ள அசுத்தம் நிறைந்த, ஆரோக்கிய மில்லாத நிலைமை மறைந்து, மக்கள் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் தன்னம்பிக்கை நிறைந்தவர்களாயும், நல்ல உடல் வலிமை படைத்தவர்களாயும் வாழ்வார்கள். சமூகமும் இயற்கையும், அகம் புறம் என்ற இருவகைத் தூய்மையிலும் ஆரோக்கியத்திலும் பிறக்கத்தக்க அழகுடையனவாயிருக்கும்.

7. உண்மையான ஜனநாயக வாழ்க்கையும் ஆட்சிமுறையும் நாட்டில் வழங்கும். மக்கள் அனைவரும் தங்கள் கடமையும் உரிமையும் உணர்ந்திருப்பார்கள். நாட்டுப் பற்றுக் கொண்டிருப்பார்கள் ; பிரஜாதத்துவ உணர்ச்சி ஓங்கியிருக்கும் ; அதனோடு, 'உலகத்துப் பிரஜை' என்ற எண்ணமும் வளர்ந்து, சர்வதேச ஒற்றுமைக்கு இந் நாட்டுப் பற்று சாதகமாக இருக்கும். இதன் பயனுய், இந்தியா ஓரே தேசம் என்றும், தொன்றுதொட்டு இந்நாடு உலகத்துக்குச் சேவை செய்ததுபோலவே இனியும் செய்யவேண்டும் என்றும் மக்கள் உணர்ந்திருப்பார்கள்.

8. பேராசிரியர்கள் இன்பம் இரண்டு வகை என்கிருர்கள். ஒன்று, தன் இன்பத்துக்கான வசதிகளைத் தன்

னிடம் பெருக்கி வைத்தல், மற்றது, தான் உலகத்துக்கு வேண்டிய இன்பத்தைப் பெருக்கி வருதல். உடைமை என்றும் ஆக்கம் என்றும் இவற்றை நாம் குறிப்பிடலாம். இச் சமூகம் உடைமையில் இன்பந் தேடாது, ஆக்கத்திலேயே இன்பந் தேடும்.

9. கலை உணர்ச்சி பொருந்தியவர்களாய் மக்கள் வாழ்வார்கள். தாய் மொழியிலும் நாட்டின் பொதுமொழியிலுமுள்ள நல்லிலக்கியங்களையும் நாட்டின் அருங்கலைகளையும் அரிய தொழிற்கலைகளையும் போற்றவும் சுவைத்து இன்புறவும் வளர்க்கவும் அறிந்திருப்பார்கள்.

10. இத்தகைய தொரு சமூகம், இந்நாட்டின் உண்மையான நாகரிகம் யாது, பண்பாடு யாது, தருமம் அல்லது தனிப்பண்பு யாது என்று உணர்ந்த உண்மையான உணர்விலிருந்தே உதிப்பதாகும்.

## கல்வி

கல்வி என்பது பயிற்சியும் வளர்ச்சியும்.

மக்களினத்தின் ஆரம்பகாலத்தில் கடவுட் பக்தியே கல்வியின் நோக்கமாயிருந்தது; 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே.' கடவுளையடைய வழிகாட்டுவதே கல்வியின் நோக்கம். ஆனால், இன்று நோக்கம் அதுவன்று. உலகில் வாழ வழி காட்டுவதுதான் கல்வியின் பெரு நோக்கம். உலகமெங்கும் இன்று ஜனநாயக வாழ்க்கையே பெருகி வருகிறது. கல்வி இதற்கே குழந்தையைத் தகுதியாக்க வேண்டும்.

கல்வியானது மனிதனைப் பூரண மனிதனாக்க வேண்டும். குழந்தையிடம் உடல் உள்ளம் உயிர் என்ற மூன்று வகைப் பண்புகள் அமைந்திருக்கின்றன. இம் மூன்றையும் தக்கபடி பயிற்றி இவை ஒருமித்து வளர்ந்து பூரணப் பொலிவுபெறச் செய்வது கல்வியின் வேலை. கல்வியால் குழந்தையிடம் ஆரோக்கியமான உடலும் மெய்வருந்தி உழைப்பதற்கான வலிமையும் வரவேண்டும். தானாக ஒன்றைச் சிந்தித்துத் திட்டமிட்டுச் செய்வதற்கான புத்திக் கூர்மையும் விவேகத்தின் விளக்கமும் துணிவும் அமையவேண்டும். பரோபகாரம், இரக்கம், ஒற்றுமை, நீதி

யுணர்ச்சி, சகிப்புத் தன்மை முதலான சிறந்த நல்லொழுக்கப் பண்புகளும் பொருந்த வேண்டும்.

மனிதனுடைய குணச்சிறப்பு மூன்று அம்சங்களைப் பொறுத்தது. இவை, பாரம்பரியம், சூழ்நிலை, பயிற்சி என்பன. பாரம்பரியம் எல்லோருக்கும் ஒன்றுபோல் இல்லை ; பாரம்பரியத்தால் நல்ல பண்புகளும் அமைகின்றன, தீய பண்புகளும் அமைகின்றன. கல்வியின் வேலையாவது, தக்க பயிற்சி அளிப்பதாலும், தக்க சூழ்நிலையை அமைப்பதாலும், தீய பண்புகள் வளராமல் தடுத்து நல்ல பண்புகளே வளரும்படி செய்யவேண்டும்.

கொள்கையளவிலே ஏட்டுப் படிப்பாகச் சில செய்திகளைக் கற்பது கல்வியாகாது. "வெறும் எழுத்தறிவு கல்வியின் நோக்கமுமன்று, கல்விக்கு இது தொடக்கமுமன்று. ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி பயிற்றுவதற்கான பல முறைகளில் எழுத்தறிவும் ஒன்று ; அவ்வளவுதான். எழுத்தறிவே கல்வியாகிவிடாது." (காந்தியடிகள்.) படிப்பு என்பது உண்மைக் கல்வி வருவதற்கு ஒரு சாதனம் ; வேறு சாதனங்களும் உள்ளன. நெட்டுருச் செய்யப் பழக்குவதோ, ஞாபகச்சக்தியை மட்டும் வளர்ப்பதோ கல்வியன்று. ஐந்து புலன்களின் திறமையையும் உடலுறுப்புக்களின் திறமையையும் நன்குய்ப் பயிற்றி வளர்ப்பதே கல்வி.

மூளை நிரம்பத் திணிப்பது கல்வியன்று ; மூளையைப் பழக்குவது கல்வி. குழந்தையின் மனமானது, மண் அள்ளிப் போட்டு நிரப்பவேண்டிய ஒரு பூந்தொட்டியன்று. அத்தொட்டியில் வளரும் பூஞ்செடியே மனம். அதற்குத் தனியான வாழ்வும் வளர்ச்சியும் உண்டு.

கூர்ந்து நோக்குந்திறன், விவேகம், புத்திக்கூர்மை என்ற பண்புகள் வெளிப்பட்டு, பயிற்சியால் வளரவேண்டும் ; கூடவே, உடல் திறன்கள் யாவும் பண்பட்டு வளரவேண்டும். மூளை வளர்வதுடன், ஞானேந்திரியமான கண்ணும், கர்மேந்திரியமான கையும் தத்தம் வேலைத் திறனில் மேம்படவேண்டும்.

ஆகவே, செய்து பழகுவதால் வரும் அனுபவத்தால், மாணவர்களுக்குச் சாஸ்திர ரீதியான ஞானமும் தொழில்

திறமையும் வளர்ந்து அபிவிருத்தியடையவும் வேண்டும். அகமும் புறமும் தூய்மை, தன்னம்பிக்கை, சுயமுயற்சி, துணிவு, ஆராய்ச்சி, அர்ப்பணம் ஆகிய திறன்கள் விளக்கம் பெறவேண்டும். வாழ்க்கையின் நோக்கமான பண்பும் பயனும் கல்வியால் கைகூடவேண்டும். இதுவே பண்புகளுக்கு ஒரு மித்த வளர்ச்சி தரும்; வாழ்க்கை வாழ்வதற்கான கல்வி என்பதும் இதுவே.

“மக்கள் எதைச் செய்ய முயன்று வருகிறார்களோ அதையே முன்னிலும் மேம்படச் செய்யும்படி கற்பிப்பது தான் கல்வி” என்று ரஸ்கின் கூறுவார்.

சுயநலம் என்ற வெறும் பிராணி நிலையைக் கடந்து, பிறர்நலம் பேணும் தெய்வ நிலையை மனிதன் அடைவது கல்வியால்தான். தன் உணர்ச்சிகளையும் தேவைகளையும் கட்டுப்படுத்தி, பிரபஞ்சமனைத்துக்கும் சேவை செய்யும் பெருநிலைக்கு அவன் வரவேண்டும். ‘எவ்வுயிரும் நின்னுயிர் போல் எண்ணி இரங்கவும்நின் - தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே’ என்ற தாயுமானவர் கருத்து இதுவே.

பிரபஞ்சம் விரிந்தது. வாழ்க்கையும் விரிந்தது. இவ் விரிவை ஓரளவு உணரக் கல்வி துணைபுரியும். ஒவ்வொரு குழந்தையும் தான் பிறந்துள்ள சூழலில் சிற்சில துறை களையும் பொருள்களையுமே அறிய முடியும். இத் துறை களையும் பொருள்களையும் விரிவாக்கிப் பலவற்றிலும் ஆர்வங்கொள்ளச் செய்யவேண்டும். ஒவ்வொருவரும், அறி வுத் துறைகள் செயல் துறைகள் அனைத்தையும் சிறிதள வேனும் அறியும்படியும், அறிவதில் ஆர்வம் கொள்ளும்படி யும் கல்வி செய்யவேண்டும். எல்லாவற்றிலும் நிபுணராகா விட்டாலும், சிலவற்றிலேனும் நிபுணராக வேண்டும்.

அரசியல் கொந்தளிப்புக்களும் கட்சி பேதங்களும் இன்று உலகில் எந்த நாட்டிலும் மலிந்து கிடக்கின்றன. நம் நாடு இதற்கு விலக்கன்று. இந்தச் சூழலில் வாழ வேண்டிய நம் குடிமக்கள், கல்விப் பயிற்சி மூலம் எந்தக் காரியத்தையும், தாங்களாக ஆழ்ந்து சிந்தித்து முடிவு காணும் ஆற்றல் பெறவேண்டும். எந்தப் பிரசார வலையி லும் சிக்காமல், சுயபுத்தியை உபயோகித்து ஆராயும் பழக்க மும் சிந்திக்கும் சக்தியும் அவர்கள் பெறவேண்டும்.

## இன்றைய கல்வி

வாழ்க்கையோடு தொடர்பு அற்றதாய் இருந்து வருகிறது. சுதந்திர உணர்ச்சியை ஊட்டவில்லை. உலகப் போக்கையும், நாட்டின் போக்கையும் தழுவி, மக்களுக்குத் தேவையானவற்றைப் போதிக்க வில்லை. வாழ்க்கை வாழும் முறையைக் கற்பிக்கவில்லை. ஆக்கத் துறையில் மாணவர் முன் லக்ஷயம் எதையும் நிறுத்தவில்லை. சமூகத்தின் அங்கத்தினர் என்ற முறையில் பயனுள்ள பொருள் உற்பத்தி செய்ய வல்லவராவதற்கு மாணவரைப் பழக்க வில்லை. கூட்டுறவு நிலவவல்ல சமூக அமைப்பைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக, போட்டியும், சுரண்டலும், ஹிம்சையும் பொருந்திய சமூகம் தோன்றவே இது துணை செய்கிறது.

பிள்ளைகளின் மூளையில் செய்திகளைத் திணிப்பதைப் பொருளாய்க் கொண்டிருந்ததே தவிர, மூளைக்குப் பயிற்சி தரும் நோக்கம் இதற்கு நடைமுறையில் இல்லை. இதுபோல, பிள்ளைகளின் உடற்பண்புகளையும், உயிரின் பண்புகளையும் வளர்ப்பதும், பயிற்சி தருவதும், இன்றைய கல்வியின் நடைமுறையில் இடம்பெறவில்லை. உள்ளப்பண்பிலுங்கூட, ஞாபகசக்தி யொன்றுக்குத்தான் அதிக இடம் இருக்கிறதே அன்றி, சுய சிந்தனைக்கு அதிக இடம் இல்லை.

இக் கல்வி பயின்று வந்தவர்கள் தேசிய வாழ்வில் கலந்து கொள்ள முடியாமற் போயிற்று. கல்விக்குப் பொருட் செலவு அதிகம் ஏற்பட்டது. இது காரணத்தால் பாமர மக்களுக்கு இக் கல்வியில் இடங் கிடைக்கவில்லை. ஏழை பணக்காரர் என்ற வேற்றுமையோடுகூட, படித்தோர் படிக்காதோர் என்ற வேற்றுமையும் விளைந்தது. ஏட்டுப்படிப்பும் மூளையுழைப்பும் உயர்ந்தவை, உடல் உழைப்பு இழிவானது என்ற எண்ணமும் படித்தோருக்கு வந்தது. இவ்விதமாகப் பல வழியிலும் இக்கல்வி நாட்டின் நல்வாழ்வைக் குலைத்தது.

நெடுங்காலம் ஆங்கில மொழியின் மூலமாய்க் கல்வி போதிக்கப் பெற்று வந்தமையால், படித்தோருக்குத் தாய் மொழிப் பயிற்சி குன்றிவிட்டது. இதனுல் இவர்களுக்கும், பாமரமக்களுக்கும் தொடர்பு இல்லாமற் போயிற்று.

இந்திய மொழிகளும் வளங் குறைந்தன. மேலும், படித்தவர்களுக்குத் தங்கள் புராதன நாகரிகத்திலும், கலையிலும், ஆசாரங்களிலும் பற்றுதல் குறைந்தது. இதன் பயனாய், இந் நாட்டில் அறிவு வளர்ச்சி மிகவும் தடைப்பட்டதோடு கூட, நம் புராதன நாகரிகம் சீர்குலைந்து, மேலை நாட்டு நாகரிகம் இங்கே காலூன்ற ஆரம்பித்து, சத்தியமும் அன்பும் மறையலாயின. பரீக்ஷையும் பதவியும் போட்டிக்கே இடமானபடியால், மக்களிடையே யிருந்த கூட்டுறவு அல்லது ஒப்புரவு அடியோடு நீங்கிற்று.

இக்கல்வி கற்றவர்கள், அமைதியான கிராம வாழ்க்கையை மறந்து, சஞ்சலம் மலிந்த பட்டண வாழ்க்கையில் தோய்ந்தவர்கள் போல் பாவனை செய்கிறார்கள். கல்வி கற்று முடித்ததும் செய்வதென்னவென்று அறியாது திண்டாடுகிறார்கள். தங்கள் குடும்பத்தாரின் வீட்டு வாழ்க்கைக்குக்கூட இவர்கள் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள். வாழ்க்கையில் எவ்விதக் குறிக்கோளும் இல்லாதபடி இளம் பருவம் முழுமையும், பதினைந்து அல்லது பதினெட்டு வயது வரை, இவ்விதம் கழித்த காரணத்தால், பிற்கால வாழ்க்கையிலுங்கூட, படிப்பில்லாத மனிதனிடம் காணப்படுகிற வினைத்திட்பம், மனவுறுதி, சுய முயற்சி, சூழ்ச்சி, சமயோசிதம், மனோபாவம் ஆகிய பண்புகள் இல்லாமற் போகின்றன. இவ்விதமாக, இன்றைய கல்வி, கல்வியின் பொது நோக்கத்துள் ஒன்றையும் நிறைவேற்றவில்லை.

## இன்றைய பாடத்திட்டத்தின் குறைபாடு

குழந்தைகளோ ஆசிரியரோ சுயேச்சையுடன் ஒன்றைச் செய்ய வழியில்லை. சுயமுயற்சியோடு ஒன்றைத் தொடங்கவோ, முடிக்கவோ சந்தர்ப்பம் இல்லை.

ஒவ்வொரு பிள்ளையும் அதனதன் ஆற்றலுக்கும் போக்குக்கும் ஏற்றபடி வளர்ச்சிபெற இடமில்லை. ஏனெனில், வகுப்பு என ஒன்றாகச் சேர்த்து, வகுப்பு முழுமையும் ஒரே வகையான எழுத்துப் பாடமே படிப்பிக்கவேண்டி யிருக்கிறது; உபாத்தியாயருக்கும் பாடசாலைக்கும் நல்லபெயர் வாங்கித் தரவேண்டி, எல்லோருமே ‘கரையேற’ வேண்டியிருக்கிறது. இதனால், தனிக்குழந்தை என்று கருதுவதே சாத்தியமில்லாது போகிறது.

இதன்பயனுக, பிள்ளைக்கும் உபாத்தியாயருக்கும், உபாத்தியாயருக்கும் பெற்ருேருக்கும், உபாத்தியாயருக்கும் சர்க்கார் பார்வையாளருக்கும் இடையே அமைய வேண்டிய நல்லுறவு அல்லது கிரமமான தொடர்பு அமையாது போகிறது.

பாடம் முழுமையும் முடிந்தபிறகு, பரீட்சை எனப் புறம்பாக ஒன்று இருத்தலினுல், பிள்ளைகள் ஆர்வமின்றியே கற்க நேருகிறது. இதனுல் தன்முயற்சி அழிகிறது. கற்றதும் சீரணமாவதில்லை.

திட்டத்தில் பாடமே பிரதானம், குழந்தை பிரதானமல்ல. குழந்தை வளர்ச்சிக்கு இதனினும் கேடு வேருென்றுமில்லை.

திட்டத்தில் போதனு முறையே பிரதானமாயிருக்கிறது. குழந்தையின் இயல்பும் மனுேதத்துவ அறிவும் பிரதானமல்ல.

இவற்ருல், உபாத்தியாயராக வருபவருக்கு அவசியமான நல்ல பயிற்சி கிடைக்கவில்லை. தப்பான பயிற்சியே கிடைக்கிறது. ஊக்கமும் அனுதாபமுமுள்ளவர்கள் உபாத்தியாயராகத் தேர்ந்துகொள்ளப்பெறுவதில்லை.

திட்டம் உத்தியோகந் தருவதற்கு என்றே ஏற்பட்டதாகிறது. அதுவும் உடல் வருந்தி உழைக்கும் உழைப்பல்ல; நகத்தில் அழுக்குப் படாமல் உழைப்பது. எனவே, பாமர மக்களை விட்டுக் கற்பவனைத் தெளிவாய் வேறு பிரிக்கிறது.

மேலைநாட்டு முறையிலமைந்த சர்வ கலாசாலையின் ஆதிக்கம் இங்கு அதிகமாயிருக்கிறது. பத்து வருஷம் படித்து முடித்துச் சர்வ கலாசாலை போக விரும்பினுல், அப்போது அவர்கள் சொல்லைக் கேட்கவேண்டியிருக்கிறது; ஆகவே இப் பத்து வருஷக் கல்வியும், பிள்ளைக்கோ நாட்டுக்கோ வேண்டியதாயிராமல் சர்வ கலாசாலையாருக்கு வேண்டியதாயிருக்கிறது.

இவ்வளவும் ஆனுலும், இத்திட்டம் வாழ்க்கைத் துறைகளனைத்தும் ஆழமாகத் தழுவியிருக்கிறதா என்ருல் அதுவும் இல்லை.

கிராமங்களுக்கு இது ஏற்றதாயில்லை. கீழிருந்து, தேவையை யொட்டித் திட்டம் ஏற்படுவதற்குப் பதிலாக,

மேலிருந்து உத்தரவுமூலம் ஏட்டளவில் நடைபெறுவதாயிருக்கிறது.

## ஆதாரக் கல்வி

மேற்சொன்ன இத்தனைக் குறைபாடுகளையும் போக்கிக் கல்வித்துறையில் வளர்ச்சிக்கான ஒரு பெரும் புரட்சி வரவேண்டுமென்று காந்தியடிகள் கருதினார். கல்வியானது நாட்டு மக்களின் பண்புக்கு ஒத்ததாய் இருக்கவேண்டும். இந்நாட்டில் மிகவும் அதிகமாயுள்ள மக்களின் படிப்பின்மையைச் செயல் முறையில் போக்கவேண்டும். இதையும் சுருங்கிய காலத்துக்குள் நிறைவேற்ற வேண்டும். ஏழைமக்களே மிகுந்த இந்த நாட்டுக்கு, கல்வியின் மூலம் ஜீவனத்துக்கும் வழிகாட்டவேண்டும். இத்தனை அம்சங்களும் பொருந்தி இருந்தால்தான் கல்வியானது அடிமைத்தனையில் துன்புற்ற இந் நாட்டை உண்மையான சுதந்திரம் பெற வல்லதாக்க முடியும்.

வாழ்க்கை வாழக் கற்பதே கல்வி. இக்கல்வியை வாழ்க்கை முழுமையும் கற்கவேண்டும். தாயின் கருப்பத்தில் சிசு உருக்கொள்வது முதல் மயானம் செல்வது வரையில் இக்கல்வி நடைபெறுகிறது என்று காந்தியடிகள் சொல்லுவார். பரீக்ஷை தேறுவதற்காகவோ, வேறொரு பதவிக்குத் தகுதி பெறுவதற்காகவோ கற்பது கல்வியாகாது. வாழ்க்கையில் என்னென்ன பிரசினைகள் எழக்கூடுமோ, அவற்றிலெல்லாம் பிள்ளைகள் கல்வி பயிலுங் காலத்துத் தாமாகவே ஈடுபட்டு முடிவு காண்பதே கல்விப் பயிற்சி. பின்னர் நாட்டில் நிலவ வேண்டுமென்று எண்ணுகிற சுதந்திர வாழ்க்கையும், உழைப்பும், சமாதானமும், கூட்டுறவும் பிரஜாதத்துவமும் மாணவர் வாழும் தினசரி வாழ்க்கையிலேயே பொருந்தவேண்டும்.

வாழக் கற்பது என்று சொல்லும்போது, எதிர்காலத்தில் இந்நாட்டில் எத்தகைய சமுதாயம் உருக்கொள்ள வேண்டும், எவ்வித ஜனநாயக ஆட்சி வழங்கவேண்டும் என்று நாம் எண்ணுவோமோ, அதையே மாணவர் வாழ்ந்து பயிலவேண்டும். ஆதாரக் கல்வி என்று சொல்லும்போது, வாழ்க்கையில் அதற்குரிய பண்பும் பயனும்

பொருந்துவதற்கான கல்வி என்று பொருள்படும்; இக் கல்வி வாழ்க்கை வாழ்வதற்கு ஆதாரமான கல்வி.

வேலையின்மூலந்தான் கல்விவரும் என்பது உலகெங்கும் ஒப்புக்கொள்ளப் பெற்றுள்ள ஓர் உண்மையான கல்வித் தத்துவம். காந்தியடிகள் இதனினும் ஒருபடி மேற்சென்று, செய்யும் வேலை அல்லது உழைப்பானது சமூகத்தில் அடிப் படையான பயன் விளைவிக்கவேண்டும் என்றும் கூறினர். தொழிலென்று நாம் கல்வித்துறையில் பேசும்போது அதன் சாரம் இதுவாகும்; இதனல்தான் ஆதாரக் கல்வியானது இன்று ஜீவாதாரமான தேவைகளுக்குரிய ஏதேனும் ஒரு தொழிலுடன் இணைந்திருக்கிறது.

## ஆதாரக் கல்வியின் தோற்றுவாய்

ஆரம்பக்கல்வி என்று சொல்கிற நம் இளங் குழந்தை களின் கல்வியை இதுவரை யாரும் கவனிக்கவே யில்லை. ஆங்கிலேயர் நம்மீது சுமத்திய கல்வித்திட்டம், மேல் படிப் பைத் தனக்கேற்ற வழியில் ஒழுங்கு செய்ததே தவிர, ஆரம் பப் படிப்பை எவ்விதத்திலும் செம்மையாக்கவுமில்லை, மேம்படுத்தவுமில்லை; சர்வ ஜனக் கல்வி வேண்டும் அல்லது பாமரமக்கள் அனைவரும் கல்வி கற்கவேண்டும் என்று அக் கல்வித் திட்டம் எண்ணிப் பார்க்கவேயில்லை. இந்தியக் கல்வியைச் சீர்திருத்தும் எண்ணம் கொண்டிருந்த தேசபக் தர்கள் யாவரும் இதில் கவனம் செலுத்தினர்கள். கல்வி அனைவருக்கும் கிடைக்கவேண்டும், அதிலடங்கிய விஷயமும் அனைவருக்கும் ஏற்றதாயிருக்க வேண்டும் என்பது அவர் கள் கருத்து; கல்வி ஒவ்வொருவருக்கும் பிறப்புரிமை என்ற உணர்ச்சி கல்விக்கான பாடத்திட்டத்தில் அங்கீ கரிக்கப் பெற்றிருத்தல் வேண்டும். கல்வியின் போக்கையே அடியோடு மாற்றி, மேற்கூறிய கருத்துக்கேற்ற புதிய அடிப்படையை அமைத்த பெருமை மகாத்மா காந்திக் குரியது.

தேசிய ஆதாரக் கல்வி என்று வழங்க ஆரம்பித்த புதிய காந்தியக் கல்வி முறையானது, 1937ஆம் வருஷம் அவர் தமது ஹரிஜன் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளின் மூலந்தான் முதன் முதலில் உலகுக்குத் தெரியலாயிற்று.

இங்கு அவர் கூறிய கருத்துக்கள் யாவும் புத்தகப் படிப்பினுலோ, மேல்நாட்டுக் கல்விமுறைகளின் ஆராய்ச்சியாலோ, வந்தமையவில்லை. இளமையிலிருந்து தாம் பெற்ற அனுபவத்தாலும் செய்த சிந்தனையாலும் அவை விளைந்தவை. குழந்தைகளிடம் அவருக்குப் பிரியம் அதிகம்; குழந்தைகளுக்குக் கல்விபோதிக்க வேண்டும் என்பதே அவருடைய ஆசை. உபாத்தியாயர் வேலைக்கு அவர் ஒரு சமயம் முயன்று வேலை கிடைக்காமல் போயிற்று!

தென்னுப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் முதன் முதலாகத் தொடங்கியபொழுது, இந்தியர்களின் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பு அவருக்கு வந்தது. அப்போதுதான் அவர் கல்வித்துறையில் சிந்தனையைச் செலுத்த ஆரம்பித்தார். வெறும் ஏட்டுப் படிப்பு நமக்குப் பயனற்றது என்றும், உண்மையான கல்வி என்றால் அது குழந்தையின் உடல் உள்ளம் உயிர் ஆகிய மூன்று திறத்திலும் உள்ள பண்புகளைப் பூரணமாய் வளரச் செய்யவேண்டும் என்றும் அவர் கண்டார். அங்கு அமைத்திருந்த டால்ஸ்டாய் விவசாயப் பண்ணையில், உள்ளப் பயிற்சியும் ஒழுக்கப் பயிற்சியுமே முதலிடம் பெற்றன. சிறந்த ஒழுக்கம் குழந்தைகளிடம் அமையுமானல், ஏட்டுக்கல்வியும் பிறவும் மிக்க எளிதாக வரமுடியும் என்று அவர் உணர்ந்தார். சமையல் முதல் தோட்டிவேலை வரையில் பிள்ளைகளையும் சேர்த்து ஈடுபடுத்தியதால், அங்கு போதுமான உடற் பயிற்சி கிடைத்தது; தோட்டவேலையும் இருந்தது. இதில் பிள்ளைகளே பெரும்பங்கு கொண்டார்கள். விறகுடைத்தல், குழி தோண்டுதல், மூட்டை தூக்குதல் முதலான கடின வேலைகளையும் அவர்கள் செய்தார்கள். செருப்புத் தைத்தலும் பழகினார்கள். இவற்றிலிருந்து, உடலுழைப்பே உண்மையான கல்விக்கு அடிப்படை என்று மகாத்மா காந்தி முடிவு செய்தார். தன்னம்பிக்கையும், சுயமுயற்சியும், புத்திக் கூர்மையும், ஆரோக்கியமும், ஒற்றுமையும், சமயோசித புத்தியும் வளர்வதால், கல்விக்குக் கருவி இதனினும் சிறந்தது வேறொன்றில்லை என்று அவர் உறுதியாகக் கருதினார்.

பின்னர் அவர் பீகார் மாகாணத்தில் சம்பரான் ஜில்லாவுக்குப் போய் அங்கு நடந்த போராட்டத்தில் ஈடுபட்டபோது, அக்கருத்துக்கள் மேலும் உறுதிபெற்றன.

சுகாதார வாழ்வுக்கான கல்வி பாமர மக்களுக்கு எவ்வளவு அவசியம் என்பதை அங்கு நேர்முகமாய்க் கண்டார். பாடசாலையில் துப்புரவு, சுகாதாரம், ஆரோக்கியம் பற்றிப் பிள்ளைகள் பெறும் பயிற்சியிலிருந்து பெரியவர்களுக்கும் பயிற்சியளிக்க முடியும் என்பதை அவர் அங்கு பார்த்தார்.

பிறகு ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தகாலத்தில், தேசியப் பாடசாலைகளைத் தொடங்கி, அங்கு கட்டாயமான தொழிலாக நூற்றலைத் தொடங்கிவைத்தார். நூற்றல் மூலம் பாடசாலை தன் செலவைச் சமாளித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அப்போதே ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், கைகால்களுக்கும் கண் காதுக்கும் பயிற்சி தராத கல்வி கல்வியல்ல என்பது அவருடைய திட்டங்களுக்கு அடிப்படை. ஆனால் அக்காலத்தில் (1921) நூற்றல் கலை பூரண அபிவிருத்தி அடையாமையால், தேசியப் பாடசாலைகளின் சோதனைகள் பூரண வெற்றியளிக்கவில்லை. அனேக தொண்டர்கள்செய்த இடைவிடாத முயற்சியினால், சுமார் 1937க்குள் நூற்றல் கலையும் கருவிகளும் மிக்க அபிவிருத்தி யடைந்துவிட்டன. இப்போது தான் அவர் திட்டமாகவும் ஆதார பூர்வமாகவும் தொழில் மூலம் கல்வி என்பது பற்றி எழுதுவது சாத்தியமாயிற்று.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் மூலம், கல்வி என்ற இலாகா பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியருக்கு மாற்றப்பட்டது ; ஆனால் அதற்கான நிதியிலாகா மாற்றப் படவில்லை. இதனால், கல்வியில் சீர்திருத்தம் செய்ய எண்ணினாலும், நிதியின்மையால், செய்யமுடியவில்லை. அன்றியும், கல்வி முதலான அபிவிருத்தித் துறைகளுக்கான நிதி முழுமையும் மதுவருமானத்திலிருந்தே வரவேண்டும் என்பது இந்திய சர்க்காரின் திட்டம். ஆகவே கள்குடியே ஒழியவேண்டும் என்று தேசபக்தர்கள் சொன்ன போது, கல்விக்குப் பணம் என்று பேசவே வழியில்லை.

1935 ஆம் வருஷத்துச் சட்டம், மாகாண சுயாட்சி யளித்தது. அதன்படி இந்திய மாகாணங்கள் பதினென்றில் ஏழில் காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டது. இவர்களுக்குக் காந்தியடிகள் சொன்ன முதல்யோசனை, மதுவை ஒழித்தல். இரண்டாவது யோசனையே, பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் பயனுள்ள ஒருதொழில் செய்யப் பழக்கி அதில் கிடைக்

கும் வருவாயின் மூலம் செலவைச் சரிக்கட்டிக்கொள்ள முயலவேண்டும் என்பது. இந்த யோசனைகளை அவர் ஹரிஜன் பத்திரிகையில் விரித்து எழுதியிருந்தார்.

1937 ஆம் வருஷம் சென்னை மாகாணத்தில்தான் முதன் முதலாக மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. ராஜாஜி மந்திரி சபையானது, சேலம் ஜில்லாவில் அக்டோபர்மாதம் முதல்தேதி சட்டபூர்வமாய் மதுவை ஒழித்தது. இதனால் மதுவருமானம் போய்விடும், கல்வியே போய்விடும் என்ற கூக்குரல் நாடெங்கும் பலமாயிற்று. (மது, கல்லாமை என்ற இரண்டு கேடுகள் : இவற்றுள் கல்லாமை இருந்தாலும் இருக்கட்டும், மது ஒழியட்டும் என்றுகூட மகாத்மா துணிந்து கூறினர்.) பிறகு இதற்குப் பதிலளிக்கும் முறையில் மகாத்மாகாந்தி தம் கல்வித்திட்டத்தின் இரண்டாவது அம்சமாகிய உழைப்பின் மூலம் செலவைச் சரிக்கட்டுதல் என்ற கருத்தை விளக்கி எழுதினர்.

இதற்கிடையில், 1937ஆம் வருஷம் வர்தா நகரத்தில், மார்வாரிக் கல்விச் சங்கம் என்ற சங்கமானது தன் வெள்ளி விழாவைக் கொண்டாடியது. அச்சமயம் அது அகில இந்தியக் கல்வி மகாநாடு ஒன்றை அங்குக் கூட்டிற்று. அக்டோபர் 22, 23 தேதிகளில் நடந்த அந்த மகாநாட்டுக்கு மகாத்மா காந்தி தலைமை வகித்தார். ஆங்கிலக் கல்வி முறையைப் போக்கி,நாட்டுக்கு ஏற்ற தேசியக் கல்வித்திட்டமொன்றைப் புதிதாக வகுப்பதே அந்த மகாநாட்டின் முக்கிய நோக்கம்.

மகா நாடு கூடுவதற்கு மூன்று மாதங்கள் முன்னதாக, காந்தியடிகள் கல்வியைப் பற்றித் தாம் தமது ஹரிஜன் பத்திரிகையில் விளக்கி எழுதியிருந்த கருத்துக்களை மகாநாட்டாருக்கும் தெரிவித்தார். நாடெங்குமிருந்த கல்வி நிபுணர்களும் கல்விமந்திரிகளும் அங்கு கூடியிருந்தார்கள். மகாநாட்டார் அவற்றை நன்கு ஆலோசித்தபின், பின்வரும் நான்கு தீர்மானங்களை நிறைவேற்றினர்கள் :

1. இந்த நாட்டில் **எல்லோருக்கும்** ஏழு வருஷ **காலம்*** **இலவசமான கட்டாயக் கல்வி** தேசமெங்கும் பரவக்கூடிய ஒரு திட்டப்படி போதிக்க வேண்டும்.

---

*இந்த ஏழுவருஷக் கால அளவை 1950இல் பாட்னாவில் கூடிய கல்விச் சங்கத்தார் எட்டு வருஷமாக்கி யிருக்கிறர்கள்.

2. கல்வி போதிக்கிற மொழி தாய்மொழியாகவே இருக்கவேண்டும்.

3. இந்த ஏழுவருஷ காலக் கல்வியானது பயனுள்ள ஏதேனுமொரு கைத்தொழிலை ஒட்டியதாய் இருக்கவேண்டும். இந்தக் கைத்தொழிலும் குழந்தை வாழ்கிற சூழ்நிலைக்குப் பொருத்தமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். குழந்தையினிடம் அபிவிருத்தி செய்கிற மற்றெல்லாச் செயல் திறனும், குழந்தைக்கு அளிக்கிற எல்லாப் பயிற்சியும், இயன்ற வரையில் இந்தக் கைத்தொழிலுடன் பூரணமாய் ஒன்றிய தொடர்பு கொண்டதாய் இருக்கவேண்டும்.

4. இந்தக் கல்வித் திட்டமானது காலக்கிரமத்தில் பள்ளிக்கூடத்தின் தொழில் வருவாய் மூலம், உபாத்தியாயர்களுக்காக ஏற்படும் செலவைச் சரிக்கட்டிக்கொள்ளும்.

பிறகு, இதை யடுத்து (1938 மார்ச்சு மாதம்) ஹரிபுராவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாடும், இந்தத் தீர்மானங்களை ஏற்று, வருங்காலத்தில் இந்தியாவின் தேசியக் கல்வி இம்முறையில் அமைய வேண்டும் என்று முடிவு செய்தது. மகாநாட்டில் செய்த இத்தீர்மானங்களை ஒட்டிப் பாடத்திட்டம் முதலியன தயாரிப்பதற்கு டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்களைத் தலைவராகவும், ஸ்ரீ அரியநாயகம் அவர்களைக் காரியதரிசியாகவும் கொண்ட ஒரு கமிட்டி நியமனமாயிற்று. மற்ற அங்கத்தினர்: கே. ஜி. சையத்தீன், காகா கலேல்கர், கிஷோரிலால் மஷ்ரூவாலா, ஜே. ஸி. குமரப்பா, கிருஷ்ணதாஸ் ஜாஜு, விநோபா பாவே, ஆஷாதேவி ஆவர். இந்தக் கமிட்டியார் ஒரு மாதங் கழித்து, இத்தீர்மானங்களை ஒட்டிய விரிவான கல்வித் திட்டத்தை மகாத்மா காந்தியிடம் சமர்ப்பித்தார்கள். இத்திட்டமே, ஜாகிர் ஹுசேன் கமிட்டி அறிக்கை என்று வழங்குவது. இந்தத் திட்டத்தை நடத்துவதற்காக இதே தலைவரையும், காரியதரிசியையும் கொண்ட ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம் (அதாவது அகில இந்திய கல்விச் சங்கம்) என்ற சங்கம் நிறுவப்பெற்றது. இச்சங்கத்தார், வர்தாவுக்கு அருகிலுள்ள சேவாகிராமம் என்ற கிராமத்தில், சுமார் பத்து வருஷ காலமாக ஒரு பாடசாலையையும் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையையும் வைத்து நடத்திவருகிறார்கள். இவர்கள் நடத்திவரும் கல்வி முறை

யைத்தான் பிற மாகாண அரசாங்கங்கள் ஓரளவுக்கு ஏற்று நடத்த முயல்கின்றன. நாம் ஆதாரக் கல்வி என்று கூறுவதும் இக்கல்வி முறையேயாகும்.

காந்தியடிகளுக் கேற்பட்டிருந்த நூற்றல் - பைத்தியம் என்றும் கிறுக்கு என்றும் அனேகர் கருதி ஒதுக்கி விட்டிருந்த அதே கருத்துக்களை மேல்நாட்டு முறையில் தேர்ந்த கல்விநிபுணர்களும் குழந்தை மனோதத்துவ நிபுணர்களும் பூரணமாய் ஆதரித்தது, நம்மவர்கள் அனேகருக்குக் கூடப் பெருவியப்பாகத்தான் அப்போது இருந்தது. இந்திய சர்க்கார் அமைத்திருந்த மத்திய அரசாங்கக் கல்விச்சபையின் ஆலோசகரா்க வந்த சர் ஜான் சார்ஜெண்டும் இப்புதுக்கல்வி முறையில் ஆர்வம் கொண்டார். மறு வருஷம் புனாவில் கூடிய கல்வி மகாநாட்டிலும் அவர் கலந்துகொண்டார். மத்திய கல்விச்சபையானது பி. ஜி. கேர் தலைமையில், வர்தாக் கல்வித் திட்டத்தைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தியது. நன்றாய் ஆராய்ந்த பின் அக்கமிட்டியும், வர்தாத் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. இவ்விதமாக முடிவில் ஏளனம், கண்டனம், அவநம்பிக்கை என்ற நிலைகளையெல்லாம் தாண்டி, காந்திய ஆதாரக் கல்வியானது இந்தியக் கல்வி நிபுணர்களும் ஏற்று ஆதரிக்கவேண்டிய கல்வி முறையாக ஆயிற்று.

## இக்கல்வியின் பெயர்

ஆதாரக்கல்வி என்று நாம் இங்கே கூறுவது மேற்குறித்த காந்தியக் கல்விமுறை. ஆங்கிலத்தில் இதை பேஸிக் எஜுகேஷன் என்பார்கள். ஹிந்துஸ்தானியில் நயீ தாலீம் (புதுமுறைக் கல்வி) என்றும், புனியாதி தாலீம் (ஆதாரக் கல்வி) என்றும் சொல்லுவார்கள் ; தாலீம்—கல்வி. வர்தா நகரில் கூடிய கல்வி மகாநாட்டில் இக்கல்வி முறை உருக்கொண்டமையால் இதை வர்தாக் கல்வித்திட்டம் என்றும், அகில இந்தியக் கல்விச் சங்கம் இக்கல்வி முறையைச் சேவா கிராமத்தில் நடத்திவந்த காரணத்தால் சேவா கிராமக் கல்விமுறை என்றும் இதைக் குறிப்பிடுவார்கள். தமிழில், மூலக்கல்வி, அடிப்படைக் கல்வி, புதுக்கல்வி, வேர்க்கல்வி, தொழிற்கல்வி, தொழில்மூலம் கல்வி, காந்தியக் கல்வி

என்றெல்லாம் இக்கல்வி முறை வழங்கப்பெறும். இதை நாம் **ஆதாரக் கல்வி** என்றே எங்கும் வழங்குவோம்.

### ஆதாரக்கல்வியின் பொருள்

ஆதாரக் கல்வி என்று இங்கு நாம் கூறுவதன் முக்கியமான அம்சங்கள் பின்வருவன ஆகும் :

1. இது எல்லோருக்கும் கல்வி. இலவசக்கல்வி. கட்டாயக்கல்வி. கட்டாயக் கல்விக்கான பொறுப்பும் ஏற்பாடும் அரசாங்கத்தைச் சேர்ந்தவை.

2. இக்கல்வியானது, குழந்தைக்குச் சுமார் ஆறு வயதில் தொடங்கி 14 வயதுவரை நடைபெறும். இக்கல்வியை முடித்த பையனுக்கு ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் குறிப்பிட்டுள்ள அறிவின் தரம் அல்லது திறமை ஏற்பட்டிருக்கும். (இதை ஏறக்குறைய மெட்ரிகுலேஷன் தரம் என்று முன்னமே சொல்லி வந்தார்கள். ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி என்றும் உயர்தரக் கல்வி என்றும் இன்று சொல்பவை யாவும் ஆதாரக் கல்வியினுள் அடங்கும்.)

3. கல்விப் பயிற்சிக்குப் புத்தகமே கருவி என்றிருந்த நிலை நீங்கி, குழந்தையின் சூழ்நிலையை ஒட்டி மக்களின் ஜீவாதாரத் தேவைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு கைத்தொழிலே கல்விக்குக் கருவியாக இருக்கும். குழந்தையின் அறிவை இந்தத் தொழிலோடு தொடர்பு படுத்தி வளர்க்கவேண்டும்.

4. குழந்தைகளை இவ்வாறு பயனுள்ள ஓர் உற்பத்தித் தொழிலில் ஈடுபடுத்துவதன் மூலம், பாடசாலைக்கு வருவாய் கிடைக்கும். இந்த வருவாயானது காலக் கிரமத்தில் பாடசாலைக்கு ஏற்படும் நடைமுறைச் செலவுகளுக்கு (அதாவது உபாத்தியாயர் சம்பளம் முதலியவற்றுக்கு) ஈடு செய்ய வேண்டும்.

5. இக்கல்வி முழுமையும் தாய் மொழியின் மூலந்தான். இந்த எட்டு வருஷகாலத்தில் ஆங்கிலம் இராது. சுமாராகப் பேசுவதற்கும் எழுதுவதற்குமான ஹிந்துஸ்தானி மொழிப் பயிற்சி உண்டு.

[இப்படிச் சொன்ன மாத்திரத்திலே அனேகர் ஆங்கிலமே இல்லாமற் போய்விடுகிறதே என்று வருத்தப்

படுகிருர்கள். நிலைமை இதுவல்ல. சர்வ ஜனங்களுக்காகவும் நாம் திட்டமிடுகிறோம். சர்வ ஜனங்களுக்கும் ஆங்கிலம் இன்றியமையாத தேவையல்ல; ஆனால் தாய்மொழியின் வழியே பூரணமாய்க் கல்விப் பயிற்சி பெறுவது எல்லோருக்கும் அவசியம், உரிமையுங்கூட. அடிப்படையாக ஓரளவு கல்விக்குத்தான் நாம் இப்போது திட்டமிட முடியும்; இதுவே கட்டாயமாகவும் இலவசமாகவும் இருக்கும். தேவையானவர்களும் விருப்பமுள்ளவர்களும், இதற்கு மேல் ஆங்கிலம் கற்றுக்கொள்ளலாம். அதற்கு இப்போது செலவிடுவதுபோல் அதிகமான வருஷங்கள் செலவிட வேண்டியதில்லை. தாய்மொழி மூலம் பூரணத் தேர்ச்சி கைவந்த பையன் பிறபாடங்களில் எளிதாகத் தேர்ச்சிபெறுவான். அதுபோலவே, வேண்டுமானால் அவன் ஆங்கிலமும் எளிதாகக் கற்றுத் தேர்ச்சி பெறுவான். ஆங்கிலமொழியறிவு பெற விரும்புவோருக்கு அப்போதும் போதிய அறிவு பெறத் தாராளமாக இடம் உண்டு.]

## இக்கல்வியின் மூல தத்துவங்கள்

1. தனிமனிதர் ஒவ்வொருவரிடமும் அமைந்துள்ள உடற்பண்புகள், உள்ளப்பண்புகள், ஆன்மப் பண்புகள் என்ற மூவகைப் பண்புகளையும் ஒருமித்து அழகுபெற வளரச்செய்தல். மனிதர் என்ருல், ஆண் பெண் குழந்தை வயதுவந்தவர் ஆகிய அனைவரையும் குறிக்கும்.

2. இது வாழ்க்கைக்கான கல்வி; வாழ்க்கை முழுமையும் பெறுகிற கல்வி. வாழ்க்கையின் பல்வேறு பருவங்களை ஒட்டிக் கல்வியும் பல பிரிவுகளாயிருக்கும். இவை பாலர் கல்வி, ஆதாரக் கல்வி, கல்லூரிக் கல்வி, வயதுவந்தோர் கல்வி முதலாயின.

3. பயனுள்ள ஒரு கைத்தொழிலைக் குழந்தைக்குக் கற்பித்து, கல்விப் பயிற்சி தொடங்கிய நேரம் முதல் ஏதேனும் பொருள் உற்பத்தி செய்யவல்லதாகக் குழந்தையை ஆக்கவேண்டும். இதுவே தொழில் அல்லது உழைப்பின் மூலம் கல்வி என்பது. பள்ளிக்கூடத்தில் நடைபெறும் குருட்டுப் பாடமுறை என்ற கொடுங்கோலிலிருந்து இது குழந்தைக்கு விடுதலை யளிக்கிறது. குருட்டுப்

பாடம் குழந்தை இயல்புக்குக் கொஞ்சமும் ஒவ்வாதது. உழைப்பினுல் குழந்தையிடம் செயல் திறனும் அதனடியாக அனுபவமும், அனுபவத்தின் மூலம் அறிவின் திறனும் வளர்ச்சி யடைகின்றன. உடலும் உள்ளமும் ஒத்து வளர்கின்றன. அச்செழுத்தைப் படிப்பதுதான் கல்வி என்ற போலி முறையை விட்டு, தன் கண் கை காலையும், மூளையையும் உண்மையாகவே பயனுள்ளதொரு காரியத்தில் பழக்குந் திறமையைக் குழந்தை பெறுகிருன். இதுவே பண்புகள் யாவும் ஒருமித்த முழு வளர்ச்சியடைவதற்கான கல்வி பெறுதல் என்பது.

4. உடல் வருந்தி உழைப்பவர்களுக்கும் பணம் படைத்து உழைக்காமல் சோம்பியிருப்பவர்களுக்கும் இடையில் இன்று பெருத்த வேற்றுமையைச் சமூகத்துறையில் காண்கிருேம். உழைப்பது தாழ்வு என்ற எண்ணம் இப்போது மலிந்திருக்கிறது. பிள்ளைகள் அனைவரும் தங்கள் கைகால்களை உழைப்பில் பழக்குவதன் மூலம் இவ்வேற்றுமையைக் காலக்கிரமத்தில் குறைப்பதும், இத்தாழ்வு உணர்ச்சியைப் போக்குவதும், உழைப்பு கௌரவம் பொருந்தியது, மக்களனைவரும் ஓரினம் என்ற எண்ணங்களைப் பெருக்குவதும் நோக்கம்.

வயிறு வளர்ப்பதற்காகப் பல சமூகத்தார் கடின உழைப்பு மேற்கொள்ள வேண்டியிருப்பதால், இன்றும் சாதி வேற்றுமைகள் அப்படியே இருந்து வருகின்றன. உழைப்பினுல் தாழ்வு இல்லை என்ற உணர்ச்சியைப் பெருக்கி இச் சாதி வேற்றுமையைப் போக்குவது சமூகத்துறையில் உள்ள ஒரு நோக்கம்.

"உழைப்பில், வேலை துன்பம், பலன் இன்பம். இத் துன்பமின்றி இன்பமில்லை. உலகத்தின் பண்டைய சரித்திரத்தை ஆராய்ந்தோமானுல், உழைப்பின் கஷ்டத்தை விட்டுத் தப்ப எண்ணிய நாகரிகங்கள் யாவும் அழிந்து போயிருக்கக் காண்போம். பாபிலோன், கிரீஸ், ரோம் ஆகிய புராதன நாகரிகங்கள் இத்தகையன. இவை, உழைப்புக்கான கஷ்டத்தைத் தாங்கள் படாமல் அடிமைகளிடம் விட்டு, இன்பத்தை மட்டும் அடைய முயன்றமையால், அழிந்தே போயின. தொழிலுக்கு வந்தனை, இந்திய நாகரிகத்தில் கருத்தளவிலேனும் உண்டு. இது வாழ்க்கையிலும்

இன்று நிலைபெற்றுல்தான் இந்நாகரிகம் நிற்கும்; இல்லையாறுல் இது அழியும்.''

ஜனநாயகக் குடியரசாகிய இந்திய நாட்டில் ஒவ்வொருவரும் பூரணப் பொறுப்பையும் உணர்ந்த உத்தமப் பிரஜையாக ஆதல் வேண்டும். ஆதாரக் கல்வியானது பாடசாலையின் வேலை அமைப்பு, வாழ்க்கை முறை ஆகியவற்றின் துணையால் இந்த நோக்கம் கைகூடப் பாடுபடுகிறது.

தனிப்பட்ட மனிதர் என்ற அளவில் நம்மில் பெரும்பாலோர் உயர்ந்த திறமை வாய்ந்தவர்கள், உத்தம ஒழுக்கமுடையவர்கள். ஆனுல், சமூகமாயும் கூட்டாயும், வேலையிலும் பொது வாழ்க்கையிலும், ஈடுபடும்போது திறமை வெளிப்படுவதில்லை. ஒத்துழைப்பு இருப்பதில்லை, ஒழுக்கம் குறைகிறது, பொறுப்புணர்ச்சியும் இருப்பதில்லை. இந்த நிலையைப் போக்கி, நம்முடைய நாட்டுக் கிராமங்களின் சமூக வாழ்க்கையை எல்லா விதத்திலும் மேம்படுத்துவது ஆதாரக் கல்வியின் நோக்கம்.

தனி மனிதனிடத்தில், அவன் அங்கமாயுள்ள சமூகத்தின் சிறப்பு, பண்பாடு, நாகரிகம் ஆகியவைகளனைத்தும் காணப்படவேண்டும். சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும் இனி வருங்காலத்தின் சிறப்புக்கு வித்தும் அவனிடத்தில் அமைதல் வேண்டும். அவனுலும் அவன் காலத்துச் சமூகமும் பின்வரும் சந்ததிகளும் பயனடைதல் வேண்டும். இது இக்கல்வி முறைக்கு மற்ெருரு நோக்கம்.

மதவேற்றுமையால் துன்பமுற்ற இந்த நாட்டில் கல்வியானது மதப்பொறையைப் பெருக்கவேண்டும். மத வெறி என்பதில்லாமல் பரஸ்பர மரியாதையும் அன்பும் பூண்டு எல்லோரும் வாழவேண்டும். சமய பக்தி எல்லோரிடம் இருந்தாலும், இது பிறரைக் கௌரவிப்பதாக இருக்கவேண்டுமே யன்றிப் பிறரைத் தாழ்த்துவதாகவோ துன்புறுத்துவதாகவோ இருக்கக் கூடாது.

5. இந்தியாவில் மக்கள் தொகை மிகவும் அதிகம்; அதாவது உழைப்பு ரூபமாய்ப் பயன்படத் தக்க மனித சக்தி அதிகம். அறிவோடு வேலை கொடுத்தால், இந்தச் சக்தி அவ்வளவும் பயனுள்ளதான ஆக்கவேலையில் ஈடுபட்டு நாட்டின் தேவைக்கு வேண்டிய பலவற்றையும் அமைக்கும்.

அப்போது இச்சக்தி முழுமையும் செவ்வையாக உபயோக மாகும். இது காரணமாக மக்களிடம் உடலுறுதி, மனத் திடம், ஒழுக்கம், திறமை ஆகிய தன்மைகள் வளரும். அப் படி இன்றி, இயற்கையில் அமைந்துள்ள இச்சக்தியைப் பயன் படுத்தாமல் விட்டால், அவ்வளவும் வீண் விரய மாகும். இந்த ஏழை நாட்டுக்கு இப்படிப்பட்ட சக்தி விரயம் பெருங்கேடானது. எல்லாச் செல்வத்திலும் மனித செல்வம் உயர்வானது. இதை வீண் போகாது காப்பது தான் உண்மையான சிக்கன வாழ்க்கையாகும். அனைவருக் கும் உழைக்க வழிகாட்டுகிற கல்விதான் இச்செல்வத்தைப் பாதுகாத்துப் பயன்படுத்துவது. பொருளாதாரத் துறையில் இக் கல்வியின் பெருநோக்கம் இதுவே.

மேலும், அளவற்ற வறுமை குடிகொண்ட இந்த நாட்டில், ஒருவன் தினசரி வருமானம் இரண்டணாக்கூட இல்லை என்று நிபுணர் கூறுவார்கள். சாஸ்திரோக்த மாக உழைக்கும் பழக்கத்தையும் திறமையையும் அனை வருக்கும் அளிப்பதன் மூலம், நாட்டிலுள்ள நாற்பது கோடி மக்களின் பொருள் உற்பத்திச் சக்தியைப் பெருக்கி, பெரும்பாலும் சோம்பியே கழிக்கிற அவர்களுடைய அதிக மான ஓய்வு நேரத்தை அவரவருக்கு அவசியமான ஏதேனு மொரு பொருள் செய்து கொள்வதில் உபயோகிக்கச் செய்து, அவர்கள் வாழ்க்கைத் தரத்தைச் சுய முயற்சியால் அபிவிருத்தி செய்வதும் இந்த நோக்கத்துள் அடங்கும்.

6. வளர்ச்சிக்கு அடிப்படை ஆனந்தம். குழந்தைகள் எந்நேரமும் சுறுசுறுப்பாயிருப்பார்கள். தங்கள் கைகால் களால் எந்நேரமும் ஏதேனும் வேலை செய்துகொண்டே யிருப்பதுதான் அவர்களுக்கு ஆனந்தம் தரும். இந்த வேலையைப் பயனுள்ள உற்பத்தி வேலையாக ஆக்குவது, மனோதத்துவரீதியாக அவர்களுக்கு இன்பந் தருவதோடு, உறுப்புக்களுக்கும் புலன்களுக்கும் போதுமான பயிற்சி தருவதால், வேண்டிய உடல் வளர்ச்சிக்கும் அதன் மூலம் அறிவு வளர்ச்சிக்கும் இடம் தருகிறது. மாணவன் தன் கல்விச் செலவுக்காகத் தான் உழைக்கும்போது, அதனால் பிறக்கிற தன்னம்பிக்கையும் மனோ தைரியமும் ஒருபுற மிருக்க, மறுபுறம் இதுவே அவனுடைய ஆனந்தத்துக்கும் இடமாயிருக்கிறது. அன்றியும், படித்தபின் தான்

திண்டாட வேண்டியதில்லை, தான் கற்ற உழைப்பால் உயிர்வாழலாம் என்ற உறுதி அவனுக்கு இருக்குமாதலால், இதுவும் அவனுக்கு ஆனந்தத்துக்கு இடமாகும். மேலும், தாய்மொழி மூலம் அறிவதால், கற்பது எளிதாகி உற்சாகம் தரும். அன்னிய மொழிப் பாடம், தான் தாழ்வு என்ற உணர்ச்சியைத் தந்து, மன வளர்ச்சியைக் குலைக்கிறது. தாய் மொழியில் வரும் பாடம், தான் தாழ்வில்லை என்ற உணர்ச்சி யூட்டுவதால், இது கிரமமான வளர்ச்சிக்கும் துணையானது.

7. தொழிற் பயிற்சியின் மூலந்தான் திட்டமான அறிவு குழந்தைக்கு வரும். செய்து பார்த்து அறிவது என்பது, வெறும் ஏட்டுப் பாடமுறையில் இல்லை. தானே செய்து பார்ப்பதால் வரும் உண்மை யறிவு பெரிது. இது, குறித்த ஒரு பயனுள்ள உற்பத்தித் தொழிலில் குழந்தையை ஈடுபடச் செய்வதன் மூலம் அவனுடைய அறிவு உண்மை யாயும் செயல் ரூபமாயும் இருக்கச் செய்வதால், கல்வி அறிவு வாழ்க்கையோடு ஒட்டியே வருகிறது; உறுதியாயும் இருக்கிறது. கல்விந்துறையில் ஆதாரக் கல்வியின் நோக்கம் இதுவே.

பயிலும்போதே பொருள் தேடிக்கொள்வது என்பதும் இன்றைய கல்வித் துறையின் கருத்துக்களிலொன்று. பிள்ளைகள் உற்பத்தி செய்கிற பொருள், விலை மதிப்புடைய தாதலால், ஆதாரக் கல்வித்துறையில் இந்தக் கருத்தும் நிறைவேறுகிறது.

8. ஆதாரக் கல்வி பயின்ற பையன் தொடக்கத்தில் குறிப்பிட்ட சமூக லக்ஷயத்தை உருவாக்க வல்லவனாயிருப் பான். உறுதியான உடல், கூர்மையான அறிவு, அன்பும் சத்தியமும் நிலவுகின்ற ஆன்மா ஆகியவை அவனிடம் பொருந்தியிருக்கும். சிறந்த நாகரிகம் கலை என்பன அவனிடம் குடிகொள்ளும். நாட்டு வாழ்வில் அரசியல் சமூகம் பொருளாதாரம் நாகரிகம் ஆகிய எல்லாத் துறை களிலும் எதிர்கால மக்களிடம் உண்மையான ஜனநாயகம் வழங்கும். கல்வி பயின்றவன் எவனும் இத்துறைகளில் எழும் பிரசினைகளை உணர்ந்து தன் கடமைகளைச் செய்யவும் உரிமைகளை நிலை நாட்டவும் வல்லவனாதல் வேண்டும்.

பூரண அறிவுத் திறனேடு இவற்றைச் செய்தல் வேண்டும். இவன் தன்னுடைய புத்திபூர்வமான சேவையைச் சமூகத்துக்கு அளிக்கவேண்டும். சமூகத்துக்குப் பாரமாக இருத்தல் கூடாது. அதாவது இவன் உழைப்புக்குத் தயாராக இருந்து, தான் பொருள் உற்பத்தி செய்யவேண்டும். ஏழையாயினும் பணக்காரராயினும் அவரவர் உழைக்காத வரையில் உழைப்பு இழிவானது என்ற எண்ணம் பிறந்துவிடும். இது உண்மை ஜனநாயகத்துக்குக் கேடானது.

9. உண்மையான கட்டுப்பாடு உழைப்பின் மூலம் தான் உதிக்கும். கட்டுப்பாடு அகத்திலிருந்து வருவதேயன்றிப் பிறர் விதிப்பதால் வராது. பரிசுமுறை, போட்டி மனப்பான்மையை வளர்க்கும். ஆகையால், திறமைக்கும் உழைப்புக்கும் பாராட்டுதல் உண்டேயொழிய, இங்கு போட்டியை வளர்க்கும் நோக்கம் இராது. அப்படியே, திருத்தும் நோக்கம் பிரதானமேயன்றி, தண்டிக்கும் நோக்கம் தனியாக இருத்தல் ஆகாது.

10. சமூக வாழ்க்கையில் எங்கும் ஆடவரும் பெண்டிரும் சேர்ந்தே பழகவேண்டியிருக்கிறது. ஆதலால் பாடசாலை வாழ்க்கையும் சமூக வாழ்க்கையை உண்மையாகப் பிரதிபலிப்பதாய் இருக்கவேண்டுமானுல், இங்கும், ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து வாழ்வதே நடைமுறையாக இருத்தல்வேண்டும். இருபாலாரும் தனித்தனியே இருப்பது, ஒழுக்கக் குறைவுக்கு ஒரு காரணம் என்றும், அதிகமான பழக்கம் இருவருக்கிடையிலும் ஏற்படும்போது பரஸ்பர நம்பிக்கை அதிகமாகி ஒழுக்கம் நிலை பெறுமென்றும் கூறலாம். ஒரு பாலார் மட்டும் பயில்கிற பாடசாலையில் நிர்வாகச் சிக்கல் குறைவு என்பது உண்மை. எனினும், சிக்கலைக் கண்டு அஞ்சாது, இருபாலாரும் சேர்ந்து பழகுவதில் சாமானிய சகோதரபாவம் நிலவச்செய்தல் வேண்டும். இது பிள்ளைகளின் பாடசாலை, பயிற்சிப் பாடசாலை இரண்டுக்கும் பொருந்தும்.

### வாழ்க்கையின் தேவைகள்

மனித வாழ்க்கையில் உடல் உள்ளம் உயிர் என்ற மூன்றுக்கும் போஷிப்பு வேண்டும். சோறுமட்டும் மனிதனை

வளர்ப்பதில்லை என்ற வாக்கியம் உண்மையானது. சோறு உடலை வளர்ப்பது போலவே, உள்ளத்தை வளர்க்கக் கலைகள் முதலியனவும், உயிரை வளர்க்கச் சமயமும் வேண்டியிருக்கின்றன. எனினும், பொதுப்படையாக நாம் பார்க்கும்போது, பிந்திய இரண்டும் அவரவர் தாமே அமைத்துக் கொள்வன ; முந்தியதாகிய உடலின் தேவையைத்தான் இங்கு நாம் பேசமுடியும். ' உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே ' என்ற திருமூலர் திருவாக்கும் கருதத்தக்கது.

மக்கள் அனைவருக்கும் அடிப்படையான தேவைகள் மூன்று ; உணவு, உடை, இருப்பிடம் என்பன. மக்கள் தொகை உலகெங்கும் மிகவும் பெருகி யிருக்கிறது. போதுமான உணவு தானே கிடைப்பதில்லை ; செயற்கையான உடை வேண்டியிருக்கிறது ; தங்கியிருக்கத் தக்க இடமும் அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இடத்துக்கு இடமும் பருவத்துக்குப் பருவமும், மக்களினத்துக்கு மக்களினமும், இவை மூன்றுமே மாறுகின்றன. மாறியபோதிலும், எல்லோரும் இவற்றைத் தேடிக்கொள்ள வேண்டித்தான் இருக்கிறது. இத்தேட்டத்தில் விளைந்ததே போட்டியும் சுரண்டலும், ஆண்டான் - அடிமைத்தனமும் ; உயர்வு தாழ்வும் இதனுல் வந்தனவே. தத்தமக்கு வேண்டியதைத் தாமே தேடிக்கொள்வதானுல், இக்கேடுகள் பெருகமாட்டா; நீங்கும் என்றும் கூறலாம். ஆதலால், தொழில் செய்யக் கற்பதன் மூலம் மனிதன் கல்வி பெறவேண்டும் என்று கூறுகிற ஆதாரக்கல்வி முறைக்கு உரிய தொழில்களாக, இம் மூன்று தேவைகளையும் பூர்த்திசெய்யும் தொழில்களையே நாம் கொள்வது நியாயம். இவை தவிர்ந்த மற்ற எத்தொழிலும் எல்லோருக்கும் வேண்டியதாயிருத்தல் அருமை. ஆகவே, கல்விப் பயிற்சிக்குரிய இடமாக மற்றொன்றைக் கொள்ள முடியாது.

உணவுபற்றிய தொழிலாவது பயிர்த்தொழில், தோட்ட வேலை, சமையல் வேலை. உடை பற்றிய தொழிலாவது நூற்றல், நெசவு, சாயமிடுதல், தைத்தல், தோல் தொழில். இருப்பிடம் பற்றிய தொழிலாவது, தச்சு வேலை, கருமான் வேலை, கொத்துவேலை முதலியன.

## தொழிலுக்கு வேண்டிய தன்மை

ஆதாரக் கல்வித்துறையில் தொழில் என்று குறிப்பிடும்போது, மக்களுடைய ஜீவாதாரத் தேவையான மேற்கூறிய மூன்றில் ஒன்று சம்பந்தமான தொழில் என்பது தான் பொருளாகும். இத்தொழிலை நாம் ஆதாரத்தொழில் என்று கூறுவோம். ஆதாரத்தொழிலைத் தேர்ந்து கைக்கொள்வதில் பின்வரும் அம்சங்கள் கவனத்தில் இருக்க வேண்டும்.

1. மேற்கூறியபடி ஜீவாதாரத் தேவைக்கு உவந்தது தான் ஆதாரத்தொழிலாகும். பிற தொழில்கள் எவ்வளவு எளியன ஆயினும், எவ்வளவு பொருத்தமாயினும், எவ்வளவு பணவருமானம் தந்தபோதிலும், அவை ஒருகால் துணைத்தொழிலாக உதவக்கூடுமேயன்றி, ஆதாரத்தொழிலாக அமையமுடியாது.

2. தேர்ந்து கொள்ளும் ஆதாரத் தொழிலானது பிள்ளைகளின் கல்வி யபிவிருத்திக்குப் போதுமான இடம் தருவதாயிருக்கவேண்டும். கல்வித் திட்டத்தில் என்னென்ன பாடங்கள் வரக்கூடுமோ, எந்தெந்த வழிகளில் பிள்ளைகளின் அறிவுப் பெருக்கம் ஏற்பட வேண்டுமோ, அவற்றுக்கெல்லாம் இவ்வாதாரத்தொழில் தொடர்புடையதாயிருக்க வேண்டும். மக்கள் வாழ்க்கையிலுள்ள முக்கியமான காரியங்கள் நோக்கங்கள் நிலைமை ஆகியவற்றுடன் அதற்குத் தொடர்பிருக்க வேண்டும். இத்தொடர்பு இருந்தால்தான் இதன்மூலம் தொழிலையும் பாடத்தையும் இயைத்துப் போதிக்க முடியும்.

3. தொழில் கற்பதென்ருல் வெறும் யந்திரம்போலக் கற்பதன்று. சிறுவன் குருட்டுத்தனமாக ஏதோ ஒரு பொருள் செய்யக் கற்பது கல்வி யன்று. தொழிலைக் கற்பிக்கும்போது, அறிவியல் ரீதியாக, சாஸ்திர பூர்வமாக, அவனுக்குக் கற்பிக்க வேண்டும். குறித்த தொழில் நுட்பம் ஒவ்வொன்றையும் அவன் ஏன், எப்படி என்று மிகவும் திட்டமாக உணர்ந்து கொள்ளும்படி கற்பிப்பதே தொழிற்கல்வி. கல்விக்குக் கருவி புத்தகந்தான் அல்லது அச்சடித்த வார்த்தைதான் என்று இதுவரையில் இருந்ததை மாற்றி, இப்போதுகல்விக்குக் கருவி தொழில் என்று

அமைப்பதனுல், பிள்ளைகளனைவரையும் திறமை வாய்ந்த தொழிலாளிகளாக மாற்றுவது நோக்கமல்ல. முன்னமுள்ள பாடத்திட்டத்துடன், அதிகமாக நூற்றல் நெசவு அல்லது தச்சு வேலை என்று, கூட ஒரு பாடத்திட்டத்தைப் புதிதாய்ச் சேர்ப்பதும் பொருளல்ல. ஒரு தொழில் செய்வதால்தான் திட்டமான அறிவு வரும், குழந்தையின் பண்புகள் யாவும் பூர்ண விளக்கம் பெறும் என்ற தத்துவமே இதில் பிரதானமானது.

4. இவ்விதம் தொழிலை அறிவியல் ரீதியாகக் கற்கும் போது உற்பத்தியாகும் வஸ்துவுக்குத் திட்டமான பண மதிப்பு உண்டு. இம்மதிப்பு, மூலப்பொருளின் மதிப்பும், பிள்ளைகள் உழைப்புக்குரிய நியாயமான கூலி மதிப்பும் சேர்ந்தது.

5. பயனுள்ள, பணமதிப்பு மிகுந்த, உற்பத்தியில் பிள்ளைகள் ஈடுபடுவதால், அவர்களிடையே கூட்டு முயற்சி, திட்டமிட்டுச் செய்யும் திறமை, எக்காரியத்தையும் பற்றிய திருத்தமான அல்லது துள்ளிபமான அறிவு, துணிவான தன் முயற்சி, தன்னம்பிக்கை, உழைப்பில் மகிழ்ச்சி, தனிப் பொறுப்பு, தலைமை ஆகிய அம்சங்களில் அவர்களுக்குப் பயிற்சி ஏற்படுகிறது. தொழிலானது இப்பயிற்சிக்கு இடம் கொடுக்கவேண்டும்.

## மூலப் பொருளின் தன்மை

தேர்ந்துகொண்ட மூலப்பொருளானது அதை உபயோகிக்கும் சிறு பிள்ளைகளின் சக்திக்கு ஏற்றதாயிருக்க வேண்டும்.

சுகாதாரத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் கேடு செய்யாததாய் இருக்கவேண்டும். தொழில் செய்த பின்னும் செய்யு முன்னும் பொருளையும் இடத்தையும் துப்புரவாய் வைத்திருப்பது சாத்தியமா யிருக்கவேண்டும்.

கூடியவரையில் மூலப்பொருள் அந்தப் பாடசாலையிலோ அல்லது அந்தந்தப் பிரதேசத்திலோ உற்பத்தியானுல் நல்லது. மற்றப்படி விலை மலிவாய்ப் பெறத்தக்கதாயிருத்தல் வேண்டும்; கூடுமானுல் பாடசாலை நேரம்போக

மற்ற நேரத்தில் பிள்ளைகள் தங்கள் வீடுகளில் தாங்களே உபயோகிக்கத் தக்கதாயிருக்கவேண்டும்.

அப்பொருள் பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டி வளர்த்து வரவேண்டும். ஆர்வத்தோடு தொடங்கிப் பின் ஆர்வ மிழந்துபோகும்படி யிருக்கக்கூடாது.

பிள்ளைகளிடத்தில் அழகுணர்ச்சியும் கலையுணர்ச்சியும் உண்டுபண்ணத் தக்கதாயிருக்கவேண்டும்.

## ஆதாரத்தொழில்—நூற்றல் ஏன் ?

ஆதாரத் தொழிலாகக் கொள்ளத் தக்கவை பின்வருவன ஆகும். 1. நூற்றல் நெசவு, 2. தோட்டவேலை பயிர்த் தொழில், 3. அட்டை வேலை தச்சுவேலை கருமான் வேலை, 4. தோல் பதனிடுதல் செருப்புத் தைத்தல், 5. குறித்த பிரதேசத்தின் இயற்கை நிலைமைக்கும் சமூக வாழ்க்கைக்கும் ஏற்ற வேறு தொழில்—உதாரணம்: மீன் பிடித்தல், இவற்றுள் ஒவ்வொரு தொழிலையும் பற்றிய சில இயற்கை நிலைமைகளை நாம் அறிதல் வேண்டும்.

தோட்டவேலை ஆதாரத் தொழிலாக இருக்கவேண்டுமானால், பிள்ளைகளுக்கு வயது குறைந்த பட்சம் பத்துக்கு மேல் இருக்கவேண்டும். மண்வெட்டி பிடித்துக் கொத்தவும், ஏர் பிடித்து உழவும், பிள்ளைகள் குழந்தைகளாயிராதபடி சற்றுப் பெரியவர்களாயிருத்தல்வேண்டும். ஆனால் ஆறு வயதுப் பிள்ளைகளுக்குத் தொழிலை வைத்தே நாம் கல்வி போதிக்க முற்படும்போது, இத்தொழிலை ஆதாரத் தொழிலாய்க் கொள்வது மிகவும் கடினம். நான்கு வகுப்புகளுக்குப் பிறகு, இது பூர்த்தியான அல்லது முக்கியமான துணைத் தொழிலாக அமையக்கூடும். ஆரம்ப வகுப்பிலுங்கூட இது இயன்ற அளவு துணைத் தொழிலாக இருக்கலாம். (ஐந்துக்கு மேற்பட்ட வகுப்புக்களில் இது ஆதாரத் தொழிலாக அமைந்தாலும் அமையலாம்.)

அட்டை வேலைக்கு, இன்றியமையாத மூலப்பொருள் பற்றிய செலவு கிராம வாழ்க்கைக்குப் பொருந்தாது. தச்சுவேலை, கருமான் வேலை, தோல் பதனிடும் தொழில் முதலிய தொழில்கள் யாவும், சற்றே திறமை பெற்றுச் செய்ய வேண்டியவை என்று சொல்லலாம். குழந்தையின்

பருவம் இதற்கு முக்கியம். பள்ளியில் கல்வி பயிலும் ஆறு வயதுப் பிள்ளைக்கு இத்தொழில்கள் ஏற்றவை ஆகா. ஆதலால், ஆரம்ப வகுப்புக்களில் இவையும் ஆதாரத் தொழிலாயிருப்பது சாத்தியமில்லை.

தவிர, பயிர்த்தொழில் ஓரளவுக்கு இயற்கை வசதி, பருவகால மாறுதல் என்பவற்றையும் பொறுத்தது. மழை பெய்யும்போது வயல் வேலை செய்ய முடியாது. நல்ல கோடையில் எங்கும் நீர்வற்றி இருக்கும்போதும் வயல் வேலைக்கிடமில்லை. ஆகவே, தோட்டவேலை ஆதாரத் தொழிலாயிருக்குமானால், இந்தப் பருவங்களில் என்ன செய்வது என்ற கேள்வி எழும்.

நூற்றல் தொழில் ஒன்றுதான் இக்கேள்விகள் அனைத்துக்கும் சமாதானம் தருகிறது. ஏழு வயதுக்கும் குறைந்த பிள்ளைக்குக்கூட, நூற்றல் தொழில் கற்பித்துப் பொருள் உற்பத்தியும் அறிவு வளர்ச்சியும் செய்விக்கலாம்; இயற்கைவசதி இருக்குமானால் பருத்தி பயிரிட்டுக் கொள்ளலாம். இல்லாவிட்டால் வேறு இடத்திலிருந்து தருவிக்கலாம். பருவகாலத்தைப் பற்றிக் கவலை இல்லை. மழையாயினும், வெயிலாயினும், கால இடை ஈடின்றிப் பயிற்சி தொடர்ந்து நடைபெறும். மேலும், நூற்கிற நூலும், நெய்கிற துணியும், எல்லோருக்கும் தேவையானபடியால், பிற்கால வாழ்க்கையிலும் அவரவருக்கு இத்தொழில் பயன் படவல்லது. அன்றியும், வகுப்பிலும், வீட்டிலும் இத்தொழிலை எந்த நேரத்திலும் தொடங்கலாம், எந்த இடத்திலும் நிறுத்திக் கொள்ளலாம். ஆதலால், மற்றெல்லாத் தொழில்களையும் பார்க்க, நூற்றல் நெசவுத் தொழிலே பிரதான ஆதாரத் தொழிலாய் இருப்பதில் வியப்பில்லை.

மேலும், சேவாகிராமத்திலுள்ள கல்விச் சங்கத்தார் சென்ற பத்து வருஷகாலமாக இத்தொழில் மூலம் கல்வி கற்பிப்பதில் சோதனைசெய்து இப்பயிற்சி முறையை வளர்த்து, திட்டமான தரங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (வேறு எத்தொழில் சம்பந்தமாகவும் இத்தகைய சோதனையும் திட்டமும் கிடைக்கவில்லை.) அவர்களுடைய திட்டமும் முடிவுகளும் நமக்கு முன் மாதிரியாயிருக்கின்றன. ஆதலால், பாடசாலையிலும் இத்தொழிலைக் கொள்வதுதான் இப்போதைக்கு எளிது.

## பல ஆதாரத் தொழில்கள்

ஒரு பாடசாலையில் ஒரே ஆதாரத் தொழில்தான் இருக்கமுடியும். பல பாடசாலைகள் ஒரு கிராமத்தில் இருக்குமானால் அவை அனைத்திலுங்கூட, ஆதாரத் தொழில் ஒன்றாகவே இருக்கும். குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தின் மக்கள் நிலை, இடத்தின் வசதி, கல்விப் பயிற்சிக்கான வசதி ஆகிய எல்லாவற்றையும் ஆராய்ந்து ஆதாரத் தொழில் என்று ஒன்றைத் தேர்ந்து கொண்டபின் அதை மேலும் மேலும் வளர்க்க வேண்டுமேயன்றி, அடிக்கடி தொழிலை மாற்றமுடியாது. வாழ்க்கைக்கும் கல்விப் பயிற்சிக்கும் ஏற்ற பிற தொழில்களைத் துணைத் தொழிலாக வைத்துக் கொள்ளலாம். தேர்ந்தெடுக்கும் எந்தத் தொழிலும் குழந்தையின் திறனெல்லாம் சமமாகவும் பூர்த்தியாகவும் வெளிப்பட்டு விளக்கம்பெறச் செய்ய வல்லதாய் இருக்கவேண்டும்.

ஒரு பாடசாலையில் ஆதாரத் தொழில் ஒரே தொழிலாக இருந்தால் பிள்ளைகளுக்கு அதில் அலுப்பு ஏற்பட்டுவிடும் என்றும், பல தொழில்கள் இருந்தால் அலுப்பு வராது என்றும், கல்வி போதனைக்குப் பல தொழில்கள் இருப்பதே நல்லதென்றும் அனேகர் எண்ணுகிறார்கள். இவ் வெண்ணம் சரியானதல்ல. ஒரே தொழிலிலுங்கூட பிள்ளைகள் பல வகையான பொருள்களையும் கருவிகளையும் கையாளுவதால், அவர்கள் விழிப்போடும் சுறுசுறுப்போடும் இருப்பதில் தடையில்லை. மேலும் ஒரே வேலையில் அவர்கள் தீவிரமாக முனைய முனையத்தான், கல்வியபிவிருத்தியும் அதிகமாகும் என்பது கல்வி நிபுணர் கூறும் உண்மை. கவனம், சமயோசிதம் முதலிய பண்புகள் ஒரு தொழிலிலேயே நன்றாக வளரும். இப்படிப் பண்புகள் விளக்கம் பெற்ற பையன் பின்னர் எந்த வேலைக்கும் தகுதியுடையவனாயிருப்பான்.

## தொழிற் கல்வி

ஆதாரக் கல்வியை அறியாதவர்கள் இதைத் தொழிற் கல்வி என்று சொல்லுகிறார்கள். இது தொழில் மூலம் கல்வியே தவிர, தொழிலே கல்வியல்ல. இங்கு தொழில்

கற்பிப்பதில் நமது நோக்கம் குழந்தையின் வளர்ச்சி. இது வரை கல்வித்துறையில் கல்விக்குக் கருவியாகப் புத்தகத்தைக் கொண்டார்கள். ஆதாரக் கல்வியானது கல்விக்குக் கருவியாக, புத்திபூர்வமாகச் செய்கிற உழைப்பைக் கொள்ளுகிறது. இதுவே தொழில். மாணவன் நூல் நூற்பது பெரிதன்று. ஆனால், இந்நூற்பின் மூலம் அவனுடைய இரண்டு கைகளுக்கும் கண்ணுக்கும் ஏககாலத்தில் பயிற்சி கிடைக்கிறது. இந்தப் பயிற்சிதான் கல்வி வளர்ச்சிதரும். கைத்திறனும், கண்ணின் திறனும் வளர்வதுதான் மனத்தின் வளர்ச்சி. வேலையில் கண்ணையும், மனத்தையும் பழக்கியவனுக்கு, வாழ்க்கையில் இதுவே பயிற்சியாக அமையும். இந்தப் பயிற்சி இன்றி மூளையை மட்டும் பழக்கியவனுக்கு வாழ்க்கைப் பயிற்சி சிறிதும் இல்லை. ஆதலால் இவன் எதிர்காலச் சமூகத்தில் தன் கடமையையோ, பொறுப்பையோ நிறைவேற்ற இயலாது. அத்தகைய சோம்பேறிக் கூட்டத்தை இன்னும் பெருக்கிக் கொண்டு போவது, நாட்டின் நல்வாழ்வுக்கு ஒவ்வாது.

மற்றப் பாடசாலைகளில் இன்று தொழில் கற்பிக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அத்தொழிலில் திட்டமான வரவு செலவு கணக்குப் பார்ப்பதில்லை. பல வகுப்புப் பாடங்களோடு கூட இதுவும் ஒரு பாடம் – அதிகப்படியாகச் சேர்த்த பாடம் – என்ற அளவிலேதான் அங்கு தொழிற் பயிற்சி இருக்கிறது. ஆதாரக் கல்வித் துறையில் நிலைமை வேறு. இங்கு தொழிலும் ஒரு பாடம் என்ற நிலைமை இல்லை. தொழில் மூலம்தான் மற்றெல்லாப் பாடங்களும். உபயோகிக்கிற மூலப் பொருளுக்கும் மாணவனுடைய உடல் உழைப்புக்கும் பண மதிப்புப் போட்டு உற்பத்தியாகும் பொருள் மதிப்பு இதைவிட அதிகமாக இருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். தொழில் என்பது இங்கே வேடிக்கையான பரிசோதனை அன்று. உண்மையான வாழ்க்கையே யாகும்.

பள்ளிக் கூடத்தில் இளம் பிள்ளைகளின் கல்விப் பயிற்சிக்கு முக்கியமான ஆதாரம் ஆனந்தம். பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பாக ஒன்றைச் செய்வதில் ஆனந்தமே தவிர, கைகட்டி மௌனமாக இருப்பதில் ஆனந்தமில்லை, சோர்வுதான். ஆகவே பிள்ளைகளைத் தொழிலில் ஈடுபடுத்தித்

தொழில்செய்வதில் பிறக்கும் ஆனந்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு அறிவை வளர்ப்பதுதான் ஆதாரக் கல்விமுறை. பாடசாலை என்பது தொழிற்சாலை அல்ல; விளையாட்டுச் சாலையும், விஞ்ஞான சாலையும் ஆகும் என்பது பொருந்தும். தொழிலே விளையாட்டும் விஞ்ஞானமும் ஆகிறது.

## தொழில் மூலம் கல்வி

பாடசாலையில் தொழில் கற்பித்தாக வேண்டும் என்று சொல்வதற்கு மேற்குறித்தபடி பல காரணங்கள் முக்கியமானவை.

1. கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்லச் சந்தர்ப்பம் இருந்தால்தான் பிள்ளைகளுக்குப் பூரண வளர்ச்சியுண்டு. தொழில் செய்தல் என்பது குழந்தைகளுக்கு இயல்பு. செய்தால்தான் கற்றல் சாத்தியம். மாண்டிசோரி அம்மையார் முதலான கல்வி நிபுணர் அனைவரும் இதையே வற்புறுத்துகிறார்கள். நோயாளிக்கு இன்று நிபுணர் கூறும் வாழ்க்கை அல்லது சிகிச்சை முறைகளில், பயனுள்ள தொழில்செய்தல் என்றும் ஒன்று என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது. குழந்தையானவன் கையினால் ஒன்றைச் செய்து பழகும்போது, தானாகக் கற்கிற அறிவு, வேறு எத்தனை விதமான பாடபோதனையாலும் வரவே வராது.

2. கண்ணும் மனமும் நன்றாய் ஒத்தியங்கவே; பிள்ளைக்குத் தன் திறன்களை அடக்கியாளும் தன்மையும் குறித்த நிலைமையைச் சமாளிக்கும் ஆற்றலும் பொருந்துகின்றன. தன்னம்பிக்கையும் சாமர்த்திய உணர்ச்சியும் பொருந்தி, அவனிடம் ஒருமித்த பூரண வளர்ச்சி ஏற்பட இது துணை செய்கிறது.

3. புதிதாகத் தான் ஒன்றைப் படைக்கவேண்டும் என்று குழந்தையிடமுள்ள ஆக்கவுணர்ச்சியை இது பேணி வளர்க்கிறது.

4. ஓய்வு நேரத்தை என்ன செய்வது என்பது பெரிய பிரசினை. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள நல்ல ஆக்க வழியில் உபயோகிக்க இக்கல்விமுறை ஒவ்வொரு குழந்தைக்கும் வழி காட்டுகிறது. அவனிடம் பொருந்தியுள்ள பல வகை உள்ளுணர்வுகளும் (இயல்பூக்கங்கள்) தாமாக

வெளிப்பட்டுத் தொழிற்பட ஓய்வு நேரத் தொழில் உதவி செய்வதால், அவனுக்கு ஒருவிதச் சாந்தியும் திருப்தியும் நிலவுகின்றன. அழகுணர்ச்சி, தொழில் தேர்ச்சி, புலன்களின் தேர்ச்சி முதலான நல்ல பண்புகள் அவனுக்கு உண்டாகின்றன. விகாரத்தைக் கண்டு அருவருக்கும் தன்மையும் வருகிறது.

5. உழைப்பது தாழ்வு என்ற தப்புணர்ச்சியைப் போக்கி, எல்லோரும் சமமென்ப துறுதியாக்கும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனையும், வீணில் உண்டுகளித்திருப்போர்க்கு நிந்தனையும் ஏற்பட்டு, உண்மையான சர்வோதய சமுதாயம் பிறக்க இது அடிகோலும்.

6. பிள்ளைகளின் பெற்றோர் இன்று வாழ்க்கையில் எத்தனையோ துறைகளிலும் தொழில்களிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். பிள்ளைகளின் ஏட்டுக்கல்வி முறையால் இத்தேர்ச்சி முழுமையும் அக்கல்விக்குப் பயனற்றுப் போவது நாடு செய்த பாவம். தொழில்மூலம் கல்வி கற்பிக்கும்போது, பெற்றோருடைய அறிவுச் செல்வம் பாடசாலை வேலையிலும், பிள்ளைகளின் வீட்டு வேலையிலும் பயன் படச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. பின்னர் அவன் படிப்பு முடித்து வாழ்க்கையில் இறங்கும்போதுகூட், அவர்கள் அவனுக்கு வழிகாட்டவும் முடிகிறது.

7. கல்வி என்பது இதுவரையில் நம்மிடையே வெறும் ஏட்டுப்படிப்பாக இருந்துவந்திருக்கிறது. அதிகமாய்ச் சொன்னால், கல்வியானது, இரண்டு கோணல் எழுத்துக் கற்பிப்பதோடுகூட, ஓர் "உத்தியோகம்" வாங்கித் தருவதற்கான அனுமதிச் சீட்டாக இருந்தது. மனிதனை மனிதனுக்கும் முயற்சியோ மனிதனைப் பாவிக்கும் நோக்கமோ அதற்கு இல்லை. நாகரிகவுணர்ச்சி, ஆன்ம வளர்ச்சி முதலியன அக்கல்வியினிடம் பூஜ்யம். தொழில்மூலம் கல்வி என்று கூறுவது முதலாவதாக இத்தனைக்கும் மாற்றுத் தேடும் நன்முயற்சியாகும்.

8. பாடமே பிரதானம் என்றிருந்ததை மாற்றிக் குழந்தையே பிரதானம் என்று ஆக்குவதற்கான முயற்சிகளுள் இக் கல்விமுறையும் ஒரு முயற்சி.

9. இது சோதனையை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான ரீதியான ஒரு புதுக் கல்வி முயற்சி.

10. குழந்தையின் கல்வியில் போதனை, கற்றல் என்ற இரண்டு சொற்கள் இங்குக் கவனத்துக்குரியன. தொழில் மூலம் கல்வி என்பது போதனையைக் குறைத்துக் கற்றலைத் தூண்டி விடும் முயற்சி ஆகும். இது மிகப் பெரிய புரட்சி என்பதில் சந்தேகமில்லை. இம் முறையானது தன்னடக்கம், ஆராய்ச்சியுடன் கூடிய சிந்தனைசக்தி, ஆக்கத்திறன், விரும்பத்தக்க நல்ல சமூகப் பழக்கம் ஆகிய பண்புகளைக் குழந்தையிடம் இயல்பாக உதிக்கச் செய்கிறது. குழந்தையின் அனுபவம், குழந்தை தயாரிக்கும் வேலைத் திட்டம், எழுதி வைக்கும் பதிவேடுகள், திட்டத்தை நிறைவேற்றி ஒப்பிடும் முறை ஆகிய அம்சங்கள் கல்வியை வளர்க்கின்றன. குழந்தையின் தேவைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற மாதிரியாகப் போதனமுறைகளையும், கருவிகளையும் அமைத்துக் கொள்வது இங்கு முக்கியமானது.

11. முக்கியமாக இந்தக் கல்வி, பாடசாலையிலும், வீட்டிலும், சமூகத்திலும் நட்புரிமை பொருந்திய கூட்டுற வான ஜனநாயக வாழ்க்கை வாழக் கற்பிக்கிறது.

12. சிறு குழந்தையின் வாழ்க்கையில் விளையாட்டுக்கும் வேலைக்கும் அதிக வித்தியாசம் இல்லை. விளையாட்டின் மூலம் கல்வி என்பது கல்வித் துறையில் ஒரு புதிய இயக்கம். இதற்கும், தொழில் மூலம் கல்வி என்பதற்கும் அதிக வேறுபாடில்லை.

## ஆதாரக் கல்வியின் பிரிவுகள்

காந்தியடிகளின் அபிப்பிராயப்படி ஆதாரக் கல்வியானது, குழந்தை பிறந்தது முதல் மரண பரியந்தம் பயில வேண்டிய கல்வியாகும். மனித வாழ்க்கையில் பல பருவங்கள் இருப்பதுபோல், இந்தக் கல்வியிலும் பல பருவங்கள் உள்ளன. அவை, பாலர் கல்வி (Pre-Basic Education), ஆதாரக் கல்வி (Basic Education), கல்லூரிக் கல்வி (Post-Basic Education), சர்வகலாசாலைக் கல்வி (University Education), வயது வந்தோர் கல்வி (Adult Education) என்ற ஐந்தும் ஆகும்.

இவற்றுள் **பாலர் கல்வி** என்பது, குழந்தைக்கு ஆறு வயது ஆகும் வரையில் அதற்கு அமைய வேண்டிய நல்ல

பழக்க வழக்கங்கள் அமையச் செய்து, சுகாதார வாழ்க்கை, தன்னம்பிக்கை, பெரியோரிடத்தும் மற்றவர்களிடத்தும் மரியாதையுடன் பழகுதல் என்பவை போன்ற நல்ல குணங்களை வளர்ப்பதாகும். இந்தப் பருவத்தில் குழந்தைக்குப் பாடங்கள் கற்பிப்பதோ, தொழில் கற்பிப்பதோ முக்கிய மன்று. தேசத்தில் உள்ள நாட்டுப்புறக் குழந்தைகள் பெரும்பான்மையும், ஏழைப் பிள்ளைகள் ஆனமையினாலும், சிறந்த சமூகப் பயிற்சி அவர்களுக்கு இன்மையாலும், சமூகப் பயிற்சிதான் அவர்களுக்கு அவசியமான கல்வியாகும்.

**ஆதாரக் கல்வி** என்பது ஆறு வயதில் தொடங்கி 14 வயதில் நிறைவு பெற வேண்டிய பூர்த்தியான கல்வியாகும். இந்த எட்டு வருஷ காலமென்பது பிள்ளைகளின் திறமையை ஒட்டிச் சற்று முன்பின் ஆகலாம். ஒவ்வொரு வருஷமும் அதற்கென்று குறித்த பாடம் முழுமையும் கற்பித்தாக வேண்டும் என்ற நியதி இல்லை. பையனுடைய ஒருமித்த வளர்ச்சியும் திறமையும், குறித்த ஒரு நிலைக்கு வந்திருக்கின்றனவா என்பதே முடிவு செய்ய வேண்டியது.

**கல்லூரிக் கல்வி** என்பது 14 வயதில் ஆதாரக் கல்வி முழுமையும் படித்துமுடித்த பையன் அதன்பின்னர் பயிலத் தக்க கல்வியாகும். இன்றைய சர்வகலாசாலைப் படிப்புக்கு இது சமம் என்றாலும் பொருந்தும். அவனுடைய விசேஷ கல்வித் திறமையையும் ஆர்வத்தையும் பொறுத்து இது வெவ்வேறு துறையாக இருக்கும். (பக்கம் 47—49 பார்க்க.)

**வயது வந்தோர் கல்வி** என்பது இந்த நாட்டுப் பொது மக்கள் அனைவருக்கும் ஏற்ற கல்வியைப் புகட்டும் வேலையாகும். எழுத்துப் படிப்பில்லாத பாமர மக்கள் மிகுந்த இந்த நாட்டில், வயதுவந்தோர் கல்வி, குழந்தைகளுக்குரிய எட்டு வருஷக் கட்டாயக் கல்வியை விட மிகவும் பெரிய வேலையாகும். ஆனால், இத்துறையில் கல்வி என்ற மாத்திரத்தில் எழுதப் படிக்கக் கற்பிப்பதுதான் என்று எண்ணுவது பொருந்தாது. வாழக் கற்பிப்பதே இந்தக் கல்வி.

## பாலர் கல்வி

பூர்வாதாரக் கல்வி என்றும் இதைச் சொல்வதுண்டு. ஆதாரக் கல்வியின் தொடக்க வயதாகிய ஆறுக்குக்

குறைந்த வயதுடைய பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றுவதே இதன் பொருள். பாலர் என்றால் வயது 2½ முதல் 6 வரை இருக்கலாம். இவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் ஒருங்கே வளர்ச்சி ஏற்படும்படிச் செய்வதே நோக்கம். இளம் பருவத்தில் குழந்தையிடம் படிகிற பழக்க வழக்கங்களும் மனப் பான்மையும் சமூகத்தின் எதிர்கால வளர்ச்சியையும் போக்கையும் உருவாக்குவன ஆதலால், இப்பருவத்துப் பயிற்சி மிகவும் முக்கியமானது. நிர்மாணத்திட்டம் முழுமையும் பலன் அடைவது இப்பயிற்சியைப் பொறுத்தது. ஆதாரக்கல்வியின் பூரண வெற்றியும் பலனும், பாலர் கல்வியுடன் குழந்தையின் பயிற்சி தொடங்குவதாய் இருந்தால்தான் கிடைக்கும்.

பாலர் கல்வியும் வயது வந்தோர் கல்வியும் ஒன்றையொன்று சார்ந்தனவே. குழந்தையின் வீட்டு வாழ்க்கையே கல்வியில் முக்கிய அம்சமாதலால், குழந்தை வளர்ப்பு, பராமரிப்பு, கல்வி போதனை என்பவற்றில் பெற்றோரும் மற்றோரும் போதிய அறிவு பெறுதல், பாலர் கல்வி வயதுவந்தோர் கல்வி என்ற இரண்டு திறத்திலும் அவசியமாகும்.

ஆதாரக் கல்வி நடைபெறும் பாடசாலையுடன் கூடவே இப்பாலர் கல்வியும் நடைபெறலாம். திறந்த இடத்தில் பாடசாலை அமைய வேண்டும்; ஊரின் நடுவே பாடசாலை இருப்பது முக்கியம். பாடசாலையில் ஒரு வேளை உணவு அளிக்கும் முயற்சி வேண்டும்; பால் தருவது முக்கியம். ஏழைமை மிக்க நிலையில் நம் கிராமங்கள் இருப்பனவாதலால், பிள்ளைகளின் ஆரோக்கியத்தை ஒரு வைத்தியர் அவ்வப்போது கவனித்தல் அவசியம். பாடசாலையின் சமூகவேலை அனைத்தையும் ஆசிரியரும் பிள்ளைகளுமே சேர்ந்து செய்து கொள்வார்கள்.

பொதுவாக எளிய கொட்டகைகளே போதும். மழைக் காலத்துக்கு மட்டும் சற்றே பாதுகாப்பு இருத்தல் நலம். வாழ்க்கை ஏறக்குறைய குடும்ப வாழ்க்கை போலிருத்தல் வேண்டும். ஓர் ஆசிரியர் பொறுப்பில் 20 அல்லது 30 குழந்தைகள் வரையில் இருக்கலாம். தகுதி வாய்ந்த கிராமத்தார் அல்லது கிராமத் தொண்டர் தாமாக உதவி

செய்ய முன் வந்தால், பாடசாலை நடத்த அவர் உதவியை ஏற்றுக் கொள்ளலாம்.

குழந்தைக் கல்விக் கேற்ற உபகரணங்கள் இடத்துக் கிடம் மாறுபடும்; சமூக நிலையைப் பொறுத்தும் மாறுபடும். ஆங்காங்கு ஆசிரியர் தம் ஊரிலேயே இவற்றைச் செய்து கொள்ள முயல்வது நலம். கருவிகள் உண்மையான கல்வி வளர்ச்சிக்கு உதவவேண்டும்; பூரண அமைப்பு அவற்றில் வேண்டுவதில்லை. எளிமையாகவும் குழந்தையின் கற்பனைத் திறனை வளர்க்கத்தக்கபடியும் இருத்தல் வேண்டும்.

பாடங்கள்: 1. உடல் வளர்ச்சி: தகுந்த போஷணை, பால், தண்ணீர், சுத்தம் இவற்றைக் கவனித்தல்.

2. வைத்திய வசதி: சிகிச்சை, நோய் வராது காத்தல்; சொறி சிரங்கு, தீச்சுட்டது முதலான சாமானிய நோய்கள், மலேரியா, இன்புளூயென்சா, காலரா முதலான நோய்கள், உணவுச் சத்துக் குறைவால் வரும் நோய்கள் - இவற்றில் ஆசிரியருக்குப் பயிற்சி முக்கியம்.

3. சுகாதாரம்: உடல், உடை, படுக்கை, சுற்றுப்புறம், சாமான்கள், விளையாட்டு, சாப்பாடு இவற்றில் தகுந்த துப்புரவுப் பயிற்சி.

4. தன் முயற்சி: பல் துலக்குதல், தலை வாருதல், துணி துவைத்தல், குளித்தல், ஆடை அணிதல், பாத்திரம் துலக்குதல் முதலியவற்றைத் தானே செய்துகொள்ளும் பழக்கம்.

5. சமூகப் பயிற்சி: உணவு, விளையாட்டு, நீராட்டு, பிள்ளைகளோடும் பெரியோர்களோடும் பழகுதல்.

6. உழைப்பு: குழந்தையின் வளர்ச்சிக்குத் துணை புரிவது, குழந்தை சந்தோஷமாய்ச் செய்யும் வேலை; சமையல் துப்புரவு போன்ற வீட்டு வேலை, தோட்ட வேலை, நூற்றல், ஓலை முடைதல், தடுக்குப் பின்னுதல் முதலியன குறிப்பிடலாம்.

7. தாய்மொழி: தெளிவான உச்சரிப்பு. எண்ணத்தைத் தெளிவாக வெளியிடும் திறமை, சொல் வளப் பெருக்கம். இவற்றுக்குக் கருவி பாட்டு, கதை, நாடகம்; எழுத்தும் படிப்பும் இல்லை.

8. கணக்கு: எண்ணறிவு, சாதாரணக் கூட்டல் கழித்தல் முதலியன, மனக்கணக்கு, பழக்கமான அளவைகள் -

வட்டம் சதுரம் முதலிய வடிவங்கள் - இவற்றில் பயிற்சி வேண்டும். தனியான பாடம் இல்லை. தூரம் எடை பற்றிய சாமானிய உணர்ச்சி போதும்.

9. பொது அறிவு : சூழ்நிலையைக் கூர்ந்து நோக்கி அறிதல், சோதித்துக் காணல் ஆகிய பண்புகளை வளர்த்தல்.

10. சித்திரம் : மனம் போனபடி வரையலாம். ஞாபக சக்தியையும் கூர்ந்து நோக்கும் திறனையும் தூண்டி வளர்த்தல் நோக்கம்.

11. சங்கீதம் : பாடுவதில் இன்பத்தைப் பெருக்க வேண்டும். தாளக்கட்டு முக்கியம், தாளத்தோடு பொருந்திய கும்மி, கோலாட்டம், நடிப்பு முக்கியம்.

12. பிராணி வளர்ப்பு : கிராமத்தில் பசு எருமை ஆடு கோழி முதலியவற்றை மேய்த்தும் பராமரித்தும் வருகிற பிள்ளைகளுக்கு, பாடசாலையில் நாய் பூனை முதலிய பிராணிகளை வைத்து வளர்ப்பது அவசியமில்லை.

13. விளையாட்டு : விளையாட்டும் வேலையும் ஒன்ருக இணைந்திருக்கும்.

14. ஆன்ம வளர்ச்சி: மரியாதை, அன்பு, பக்தி, ஒழுங்கு, ஒத்துழைப்பு ஆகிய பண்புகள் பாடசாலையில் வளர்ச்சி பெற்ருல் போதும்.

பொதுவாகப் பூர்வாதாரக் கல்வி என்கிற பாலர் கல்வியில் நாம் கொண்டிருக்கும் நோக்கம் குழந்தைகளின் கல்வித் தேர்ச்சியல்ல ; வாழ்க்கைக்கான நல்ல பயிற்சியின் அடிப்படையையே அவர்களிடம் உண்டு பண்ண நாம் முயல்கிருேம். படிப்பில்லாமல் வாழ்கிற பெரும்பான்மையான மக்கள் தொகுதியிலிருந்து வரும் இளங் குழந்தைகள் பின்னர் பாடசாலையில் சேர்ந்து கல்வி பயில்வதற்குரிய நல்ல பழக்க வழக்கங்களை இங்கு இவர்களிடம் உண்டு பண்ணுவதே நம் முயற்சி. பாடசாலையைச் சொந்த வீடுபோலப் பாவித்து, சந்தோஷமாய்ப் பாடசாலைக்குப் போய்வரும் உணர்ச்சி, பள்ளிக்கூடம் போவதையும் வருவதையும் கஷ்டமாய்க் கருதாமல் விளையாட்டெனவே கருதி இன்பமடைந்து அதையே ஒரு கல்வியாய்க் கருதும் பழக்கம், துப்புரவாகவும் சுகாதாரமாகவும் வாழவும் எப்போதும் இருக்கவும் பழகுதல், பெரியோரிடம் மரியாதை

யோடும் அச்சமில்லாமலும் பழகுதல், உடனொத்த பிள்ளை களிடம் அன்போடும் மரியாதையோடும் பழகுதல், கீழான சொற்களைப் பேசுவதை விட்டு, நல்ல அழகான சொற்களைப் பொருளுணர்ந்து திருத்தமாக உச்சரித்தும் பேசியும் பழகுதல், பள்ளிக்கூடத்தில் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ளுதல், பிறர் பொருளையும் சொத்தையும் மதித்து நடத்தல், உண்மையாகப் பேசுதல், நடத்தல், செய்யும் செய்கைகளால் பூரணமாய்ப் புலனறிவை வளர்த்துக் கொள்ளுதல் - ஆகிய இவைகளே நாம் இங்கு நம் முன் வைத்துள்ள குறிக்கோள்.

## ஆதாரக் கல்வி—பாடத் திட்டம்

இக்கல்வி இந்த நாட்டில் வாழும் முப்பது கோடி மக்களுக்கும், வாழ்க்கை வாழ்வதற்கு வாழ்வதன் மூலமே வழி காட்டும் கல்வி என்று முன்னமே குறிப்பிட்டோம். ஏழு லட்சம் கிராமங்கள் கொண்ட இந்த நாட்டில் மக்களில் மிகப் பெரும் பகுதியினர் கிராமங்களில் வாழ்கிறார்கள். கிராமங்கள் எங்கும் மிகவும் சுகாதாரக் குறைவான நிலையில் உள்ளன. கிராமங்களை நாம் நெருங்கு முன் துர்நாற்றமும் அருவருப்பான காட்சிகளும் நம்மை எதிர்கொள்ளுகின்றன. கல்வியின் முதல் வேலை இந்தக் கிராமநிலையை மாற்றுவது. எனவே, ஆதாரக் கல்வி இங்கிருந்தே தொடங்குகிறது. ஆதாரப் பாடசாலையில் கற்பிக்கும் பாடங்களைப் பற்றிய பின்வரும் குறிப்புக்கள் இக் கருத்தை விளக்கும்.

1. **துப்புரவு :** தன் உடல் உடை சுற்றுப்புறம் தன் பொருள்கள் தன் வீடு மாட்டுக் கொட்டில் நீர்நிலை ஊர்ப் பொதுவிடங்கள் வகுப்பு முதலியன துப்புரவாக வைத்திருத்தல். குப்பை முதலியவற்றைப் போக்கி எருவாக்குதல், துப்புரவின் தத்துவம் - உடலைப்போல உள்ளமும் தூய்மையாக இருத்தல்.

2. **தேகாரோக்கியம் :** உடம்பின் நலத்துக்கும் உறுதிக்கும் வேண்டுவன யாவையென்று விஞ்ஞான ரீதியாய் அறிந்து கடைப்பிடித்தல். அதேபோல, ஊரின் நலத்துக்கும், ஆரோக்கியத்துக்கும் ஏற்றன அறிந்து செய்தல்.

சாமானிய நோய்கள், தொத்து நோய், கொள்ளை நோய் முதலியவற்றுக்குச் சிகிச்சை செய்ய அறிதல். விபத்து நேர்ந்தால் உடன் உதவி செய்தல். சுகாதார வாழ்க்கை விதிகள், உடல் பற்றிய பூரண சாஸ்திர அறிவு.

3. **நூற்றல் :** பருத்தி பயிரிடுவது முதல் துணிநெய்து முடிப்பது வரையில் செய்ய வேண்டிய எல்லா முறைகளையும் சாஸ்திரோக்தமாய்க் கற்றுத் திறமையாகச் செய்ய அறிதல், தொழில் பற்றிய கணக்கு. அவசியமானால் இத் தொழிலைச் செய்தே தன் ஜீவனத்தை நடத்திக் கொள்ளும் திறமை.

4. **தோட்டவேலை :** பயிர்த்தொழில், காய்கறி பயிரிடுதல் முதலான பிரிவுகள். நிலத்தின் தராதரம் அறிதல். தாவர சாஸ்திரம் அறிதல். தனக்கும் குடும்பத்துக்கும் வேண்டிய உணவுப் பொருள்களை விளைவிக்கத் திட்டமிட்டுச் செய்ய அறிதல்.

5. **தாய் மொழி :** திருத்தமான தாய்மொழிப் பயிற்சியே மற்றெல்லாக் கல்விக்கும் அடிப்படை. திருத்தமாகவும் விளக்கமாகவும் பேசுவது, வாசிப்பது, எழுதுவது என்பவை இருந்தால்தான் மனம் தெளிவாகச் சிந்திக்கும். அன்றியும், சிறந்த மொழி அறிவு அமைந்திருந்தால்தான் நம் முன்னோர் நமக்கு வைத்துச் சென்ற அரும்பெருஞ் செல்வங்களை நாமும் பகிர்ந்து கொள்ள முடியும். இது உத்தமமான சமூகப் பயிற்சிக்கு இடமாகி, நல்லொழுக்க உணர்ச்சியையும், தர்ம உணர்ச்சியையும் மனத்திற் புகட்டும். குழந்தையின் கலை உணர்ச்சி, இன்ப உணர்ச்சி என்பவை வெளிப்படுவதற்கும் இதுவே இடம். ஆகவே, பின்வரும் தகுதிகள் கல்வி பயின்ற பையனிடம் அமையத்தக்கன : தாராளமாய்த் தன் வாழ்க்கையைப் பற்றிய விஷயங்களை எடுத்துப் பேசி, உள்ளத்தில் தோன்றுபவற்றைப் பூரணமாக வெளியிடுதல். பொது விஷயங்களைப் பற்றித் தெரிந்த அளவு விளக்கமாய் எடுத்துச் சொல்லுதல், பத்திரிகைச் செய்திகளைப் புரிந்துகொண்டு உரத்து வாசித்தல், மனத்துக்குள் வாசித்தல், அகராதி முதலியவற்றை அறிவுடன் உபயோகிக்க அறிதல், வேகமாகவும் திருத்தமாகவும் எழுதுதல், அறிக்கை முதலியன திருத்தமாகவும் விரைவாகவும் எழுதுதல், சொந்தக் கடிதம் வியாபாரக் கடிதம் என்பன

எழுதுதல், எளிய பாடல்களைப் படித்து இலக்கியச் சுவை அறிதல்.

6. ஹிந்துஸ்தானி : இந்தியப் பொதுமொழியை எல்லோருமறிதல் இன்றியமையாதது. இந்திய நாடு ஒன்று என்ற ஒருமை உணர்ச்சி வரவும், இந்து முஸ்லிம் வேற்றுமைகள் குறையவும், இம் மொழியறிவு பேருதவியாய் இருக்கும். சுமாரான திறமையுடன் பேச அறிதல் அவசியம்.

7. சமையல் : பொறுப்புடன் சமையல் வேலைக்குத் திட்டமிட்டு, எளிமையான சமையல் செய்ய அறிதல். உணவுப் பொருள் நிர்வாகம், கணக்கு, உணவுச் சத்துப் பற்றிய சாஸ்திர ரீதியான அறிவு.

8. கணிதம்: தொழிலிலும் வீட்டு வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் வரும் கணக்குகளையும், க்ஷேத்திர கணிதக் கணக்குகளையும், மாணவர் எளிதில் தீர்க்க அறியவேண்டும். இப்பயிற்சி முழுமையும், நூற்றல், தோட்டவேலை, சமையல், பள்ளிக்கூட வேலை என்பவற்றில் மாணவனுக்கு வரும் தினசரி அனுபவத்திலிருந்து விளைவதாகும்.

9. விஞ்ஞான அறிவு : பிரகிருதியை அறிவோடு ஆராய்ந்து உணர்தல், கூர்ந்து கவனிக்கும் திறனையும், தன் அனுபவத்தைச் சோதிக்கும் பழக்கத்தையும் வளர்த்தல், இயற்கை நிகழ்ச்சிகள், மனித வாழ்க்கைக்கு விஞ்ஞானம் உதவும் வகைகள் - ஆகியவற்றின் தத்துவங்களை அறிதல், உலகத்தில் விஞ்ஞானத்தை வளர்த்த பேராசிரியர்களின் வரலாற்றை உணர்தல் என்பவை இப்பாடத்தின் நோக்கங்கள். இயற்கை சாஸ்திரம்—தாவரப் பயிர்கள், பறவைகள், மிருகங்கள், பருவகாலங்கள், வானசாஸ்திரம், தாவர சாஸ்திரம் - பிராணி சாஸ்திரம், மனித உடம்பு.

10. சமூக சாஸ்திரம் : மக்களினத்தின் வளர்ச்சியையும் இந்திய நாட்டின் முன்னேற்றத்தையும் அறிதல், இயற்கைச் சூழ்நிலையையும் சமூகச் சூழ்நிலையையும் உணர்ந்து அவற்றை மேம்படச் செய்ய அறிதல். தாய் நாட்டுப் பற்று, சத்தியம், அன்பு, நீதி இவற்றை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவான சமுதாயந்தான் வேண்டுமென்று நம்புதல், பிரஜாதத்துவ அறிவு, பிற சமயங்களிடத்தில்

பக்தி ஆகியவை இப் பயிற்சியின் மூலம் வரவேண்டும். சரித்திர பாடம், பூகோளம், ஆட்சி முறை, நாட்டு நடப்பு, சமய வரலாறு என்பன சில பிரிவுகள். சூழ்நிலையிலிருந்தே இக்கல்வி பிறக்கவேண்டும். சாதி மத பேதமோ உயர்வு தாழ்வோ அற்ற சமூகம்தான் வேண்டுமென்று மனமார விரும்புதல்.

11. கலைகள் : வர்ண பேதங்கள், உருவ பேதங்கள் ஆகியவற்றைக் கூர்ந்து அறிவதில் கண்ணுக்குப் பயிற்சி, உருவத்தை ஞாபகத்தில் நிறுத்துதல், சித்திரத்திலும், பிரகிருதியிலும் அழகைக் கண்டு ஆனந்தித்தல், சாமானிய வாழ்க்கையில் எளிதாக அலங்காரம் செய்ய அறிதல், பொருள்களுக்கு மாதிரிப் படம் வரைய அறிதல், உருவங்களைப் பார்த்து எழுதுதல், சொந்த மனோ பாவத்தோடு எழுதுதல், வர்ண ஓவியப் பயிற்சி, படங்களை அளவுப்படி வரைதல், கேளிக்கை நாடகம் அபிநயம்.

12. உடற் பயிற்சி : சூரிய நமஸ்காரம், யோகாசனம், வரிசையாகத் தாளத்துக்கு ஏற்ப அடிவைத்துச் செல்லுதல்.

13. சங்கீதம் : எல்லோரும் சேர்ந்து பாடுதல், பஜனை, தாளம் தவறாது பாடுதல், சாமானிய ராக தாளங்கள் சிலவேனும் அறிதல், அருட் பாசுரங்கள், திருப்புகழ், தேசியப் பாடல்கள், நாட்டு வாழ்த்து, கொடி வணக்கப் பாடல்கள், விழாவுக்குரிய பாடல்கள், நாடோடிப் பாட்டு, தொழிலுக் கேற்றவை, வழிநடைப் பாட்டுகள், சில கீர்த்தனங்கள், அகில இந்தியப் பாடல்கள் சில.

14. விளையாட்டு : யதேச்சையாக வரவேண்டியது ஆதலால், இது பாடத்திட்டத்துக்குப் புறம்பானது ; பல வகையான நாட்டுப்புற விளையாட்டுக்கள், குழாமாக ஆடும் ஆட்டங்கள், கேளிக்கைகள், உபகரணமில்லாத விளையாட்டுக்கள், கிராமத்தில் தயாரிக்கக் கூடிய உபகரணங்கள் கொண்ட விளையாட்டுக்கள். கிராமத்து உபகரணங்களே உபயோகிக்கத் தக்கவை ; பொருட் செலவு அற்பமாயிருக்க வேண்டும். உல்லாசப் பிரயாணம்.

15. சமயபோதனை : ஆதாரக் கல்வித் திட்டத்தில் குறித்த ஒரு சமய வழிபாட்டையோ அதன் தத்துவங்களையோ போதித்தல் என்பதில்லை. நம் நாட்டில் எல்லாச்

சமயத்தாரும் வாழ்கிருர்கள். இவர்களிடையே நடைபெறும் பாடசாலையில் ஒரு சமயத்தை மட்டும் போதித்தல் என்பது பொருந்தாது. சமய உண்மைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டுவதுதான் பிரதானம். எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையான பேருண்மைகள் சில உள்ளன. இறைவன் ஒருவன் இருக்கிருன். உலகத்தில் வாழும் எல்லா உயிர்களும் அவன் படைப்பு. ஆகவே, எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதே அந்த இறைவனுக்குச் செலுத்தும் உண்மையான வழிபாடு. அந்த இறைவன் நீதிமயமானவன். ஆதலால் அவனிடத்தில் பக்தி பூண்டவர் யாவரும் நீதியை அதாவது சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை நடத்த வேண்டும்.

எல்லாச் சமயங்களும் அடிப்படையில் ஒன்று. நம் சமயத்தில் நமக்கு எவ்வளவு பக்தியிருக்கிறதோ அதே பக்தியை மற்றச் சமயங்களிடமும் நாம் காட்டவேண்டும். இந்தப் பக்தி நிறைந்த வாழ்க்கை ஆசிரியருக்கு அமைய வேண்டும். இதன் மூலம் இதே மனோபாவம் பிள்ளைகளுக்கு ஏற்படும்.

பாடசாலையில் மாதந்தோறும் வருகிற பல்வேறு சமய விழாக்களைக் கொண்டாடுதல், கொண்டாடு மிடங்களுக்குச் செல்லுதல், பக்தர்களுடைய அருள் நூல்களைப் பாடுதல் பயிலுதல், பக்தர்கள் திருநாளைக் கொண்டாடுதல் முதலியவற்றின் மூலமாய்ச் சமய உணர்ச்சி பெருகும். அவரவர் தனிப்பட்ட சமய வழிபாட்டை வைத்திருக்கலாம் ; ஆனுல் பாடசாலையில் எல்லாச் சமயங்களும் சமம் என்ற பாவமே நிலவவேண்டும்.

ஆசிரியரும் மாணவரும் பாடசாலை வாழ்க்கையிலும் தனி வாழ்க்கையிலும் சமூகமாகவும் குடும்பமாகவும் சேர்ந்து பொதுப் பிரார்த்தனை செய்வதே நியதியாகக் கொள்ள வேண்டும்.

ஆதாரப் பாடசாலையின் செயல் திட்டமானது பின் வரும் தலைப்புக்களில் அடங்கும் : 1 ஆரோக்கிய வாழ்க்கைக் கான பயிற்சி, 2. தன்னம்பிக்கைக்கான பயிற்சி,3.பயனுள்ள உற்பத்தித் தொழிற் பயிற்சி, 4. குடிமைப் பயிற்சி, 5. கலைப் பயிற்சி என்பன. கலைத்திட்டமாகப் பின்வரும் ஏழு அம்சங்களைக் கொண்டிருக்கிறோம் ; 1. ஆரோக்கிய

வாழ்க்கை, 2. தன்னம்பிக்கையுள்ள வாழ்க்கை, 3. ஆதா ரத் தொழில் மூலம் சுய தேவைப் பூர்த்தி, 4. சாமானிய விஞ்ஞானம், 5. குடிமைப் பயிற்சியும் சமூக சாஸ்திர மும், 6. எண்ணும் எழுத்தும், 7. கலையுணர்ச்சி.

**கல்லூரிக் கல்வி**

இக்கல்வி மேலே கூறியபடி 15 வயதுமுதல் 18 வயது வரையில் 4 வருஷம் பயிலத் தக்கது. இதற்கு அடிப்படை முன்போல உழைப்பின் மூலம் கல்வி என்பதே யாகும். முன்போலவே தனிப்பட்ட மனிதன் என்ற முறையிலும், சமூகத்தில் பையனும் ஓர் அங்கம் என்ற முறையிலும் மாணவனுக்கு எல்லா வித வளர்ச்சியும் வரச் செய்தல் இதன் நோக்கமாகும். இதற்கான பாடத்திட்ட மென்பது அவரவருடைய மனப் போக்கையும், திறமையையும் ஒட் டிப் பலவிதமா யிருக்கலாம். அதற்கு ஏற்றபடி கல்வி நான்கு வருஷமோ அதற்கு முன்பின்னுகவோ பயிற்றலாம். கல்விப் பயிற்சி தாய்மொழியில்தான். பயிற்சிக் காலத் தில் மாணவர்கள் எப்படியும் தங்கள் செலவைத் தங்கள் உழைப்பின் மூலம் சரிக்கட்டிக் கொள்ள வேண்டும். முன்னமே ஆதாரக் கல்வி பயின்றுவந்த பிள்ளைகள் ஆன மையால், திறமையாக உழைக்கும் தன்மை அவர்களிடம் இருக்கும். எனவே, இப்போது முன்னிலும் பெரியவர் களாய் அவர்கள் இருத்தலினுல், உழைப்பின் மூலம் அதிக வருமானமும் பெறலாம். இந்த வருமானம் அவர் கள் உணவு முதலிய செலவுக்கும் சேர்த்து ஈடு செய்ய வேண்டும்.

குடும்ப ஜீவனத்துக்கு வேண்டியவற்றைத் தேடுந் திறமை, உணவு, உடை, இருப்பிடம் இவற்றைத் தானே அமைத்துக் கொள்ளும் திறமை, ஆரோக்கியமான வாழ்க்கை நடத்தும் அறிவு, ஓய்வு நேரத்தை லாபகரமான முறையில் பயன்படுத்திக் கொள்ளப் போதுமான அறிவு, குழந்தை வளர்ப்பிலும் பராமரிப்பிலும் போதிய அறிவு ஆகியவை இப்பயிற்சியின் மூலம் அமைய வேண்டும்.

தேர்ந்தெடுத்த தொழிலைத் தன் ஜீவனத் தொழிலாக வைத்து, வாழ்வதற்குப் போதிய சாஸ்திரோக்தமான

அறிவும் திறமையும் பெறுதல் ; தொழில் பற்றிய புத்தகங்களைப் படித்து அறிவதற்கு வேண்டிய பூரணமான மொழி அறிவு, இத்தொழில் பற்றி விளக்கமாகத் தானே பேசவும், எழுதவும் திறமை பெறுதல் ; நாட்டுப் பொது மொழியை நன்ருய்ப் பேசவும் எழுதவும் அறிதல் ; உடல் நூல், சுகாதாரம் ஆரோக்கியம், உணவு சாஸ்திரம், சாமானிய நோய்களுக்குத் தடை முறை சிகிச்சை ஆகியவற்றை நன்ருக அறிந்திருத்தல் ; பொதுவாக உலக முழுமையும் சிறப்பாக இந்தியாவிலும் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதாரம், சமூகம், நாகரிகம் பற்றிய சிக்கல்களைத் தெளிவாக ஆராய்ந்துணர்தல் ; இன்றைய வாழ்க்கைக்கு விஞ்ஞான சாஸ்திரம் என்ன உதவி செய்யும் என்பதைச் செவ்வையாக அறிதல் ஆகிய இந்தத் தன்மைகள் கல்லூரிக் கல்வி பயின்ற மாணவனிடம் அமைய வேண்டும்.

இந்தக் கல்வியில் மாணவர் தங்கள் மனப் போக்குக்கு ஒத்த விசேஷப் பாடங்களைப் பயின்று நிபுணர்கள் ஆக முடியும். தவிர, சிறப்பான விஞ்ஞான சாஸ்திரக் கல்வி, பிற தொழிற் கல்விகள், பிறமொழிக் கல்வி முதலியன இங்கு பயிலத் தக்கவை. உதாரணமாக சிறப்பான வைத்தியக் கல்வி, என்ஜினியரிங் தொழில் பற்றிய கல்வி, ஆங்கிலக் கல்வி, வடமொழிக் கல்வி, ஆசிரியர் பயிற்சி முதலிய யாவும் இப்பிரிவினுள் அடங்கும்.

இதில் ஞாபகம் இருக்கவேண்டிய அம்சங்கள் சில.

1. பயில வரும் மாணவன் குறித்த துறையில் தனக்கு மேலான திறமையும், உண்மையான ஆர்வமும் இருத்தலினுல் இதைப் பயில வருகிருன். 14 வயதில் கல்வி போதனை முடிந்து விடாது. ஆதலால் மேலும் கல்விப் பயிற்சி வேண்டும். ஆர்வத்தை யொட்டியும், திறமையை யொட்டியும் இது வெவ்வேறு விதமாயிருக்கும். நாடு இன்றுள்ள நிலைமையில், அரசாங்கமே இலவசக் கல்லூரிக் கல்விக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறவில்லை. 14 வயது வரையாவது கட்டாயக் கல்விப் பயிற்சிக்கான பொறுப்பை அரசாங்கம் இன்று ஏற்க வேண்டும். நாடு முழுமையும் இந்தக் கல்வி நடைபெற்று வருங்காலத்தில் பிந்திய கல்விக்கான திட்டம், தானே நடைமுறைக்கு வரும்.

2. உழைப்பின் மூலம் கல்வி என்ற நியதியை இங்கும் கடைப்பிடிக்கிறேம். அதாவது, இந்தக்கல்வி பயிலும் கால முழுமையும், பிள்ளைகள் தங்கள் உழைப்பின் மூலம், தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியவற்றைத் தாங்களே தேடிக் கொள்ளுகிருர்கள்.

3. இப் பருவத்தில் படிப்பவர்கள் ஒருவகையில் கிராமத்தின் கிரமமான அங்கமாயுள்ளவர்கள். ஆகவே கிராம மக்கள் வாழ்க்கையில் பிரதான தவிராத அம்சமாயுள்ள உழைப்பு இவர்கள் வாழ்க்கையிலும் இருக்குமென்பது நியாயமே. உற்பத்தித் தொழில்கள் பலவாயிருக்கலாம். இவற்ருல் மாணுக்கர் சமூகம் பள்ளிச்செலவு மட்டுமன்றி, தன் செலவு முழுமையும் சரிக்கட்டுமென்று குறிப்பிட்டோம். முறையான பூரண அறிவும் பிள்ளைகள் இங்கு பெறுவார்கள். இந்தப் பயிற்சியின் பயனுய்ப் பின்னர் குடும்ப வாழ்க்கையை ஏற்பதற்கான தகுதி இவர்களிடம் அமையும்.

4. 15 – 18 என்ற வயதில் பிள்ளைகள் தங்கள் எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தனை செய்யும் உணர்ச்சியும், திட்டமிடும் உணர்ச்சியும் உண்டாகிறது. ஆகவே இப் பருவத்தில் விருப்பமான பாடங்களைத் தேர்ந்துகொள்ள வசதி இருப்பது நல்லது.

5. இப்பருவத்தில் படிப்பவர்கள் கிராம நல்வாழ்வுக்கான தொழில்களில் வல்லவர்களாதல் வேண்டும். கிராம ஆசிரியர், தேர்ந்த விவசாயி, வீடுகட்டும் என்ஜினியர், வைத்தியர் முதலிய தொழில்களுக்கான சிறப்பான தனித் தேர்ச்சி இப்பருவக் கல்வியால் அமைதல் வேண்டும்.

### சர்வ கலாசாலைக் கல்வி

இந்த நிலைக்கு ஆதாரக்கல்விமுறை இன்னும் வளர்ந்து வரவில்லையாதலால் இதுபற்றிய விரிவான திட்டமில்லை. இது மிகவும் சிந்தித்துத் திட்டமிடவேண்டிய பகுதி. சர்வகலாசாலையின் சிறப்பியல்பு, தனித்த அறிவுத் தேட்டமும், ஒப்பற்ற பாண்டித்தியமும். • இவ்விரண்டையும் குறைக்காமலே, சர்வகலாசாலைத் திட்டத்தில் நிறைந்த

உடலுழைப்பையும் ஊடுருவிச் செல்லும்படி செய்யத்தக்க புதுத் திட்டம் இனித்தான் வரவேண்டும்.

## வயதுவந்தோர் கல்வி

முதலாவதாக இங்கு வயதுவந்தோர் கல்வி என்பது வெறும் எட்டுப் படிப்பல்ல என்பதை எப்போதும் கவனத்தில் இருத்தல் வேண்டும். வயதுவந்தோர் வாழ்க்கையைத் திருப்தியும் இன்பமும் பொருந்தி, அறிவு நிரம்பச் செய்வதே நமது நோக்கம். வயது வந்தோருக்குக் கல்வியில் ஆர்வம் உண்டாக வேண்டும். அவர்கள் வாழ்க்கையில் தனியாகவும் கூட்டாகவும் தொழில், கிராமச் சுகாதாரம், ஆரோக்கியம் பற்றிய வேலை, குழந்தை வளர்ப்பு, எழுத்துப் படிப்பு என்பவற்றில் அவர்களைப் பயிற்ற வேண்டும். இந்தப் பயிற்சிக்கு உரிய பாடங்கள் முக்கியமாகப் பின்வரும் ஆறு என்று சொல்லலாம்.

1. **தொழில் :** ஜீவனத் தொழில், நாடு முழுமையும் பரவ வேண்டிய கல்வியில் ஜீவனத்தொழில் என்பது பொதுவாகப் பயிர்த் தொழிலாகத்தான் இருக்கும். பயிர்த் தொழில்பற்றிய பயிற்சி அவர்களுக்கு வாழ்க்கையில் பூரணமாய் இருக்கிறது. ஆயினும், இத்துறையில் அவர்களுடைய அறிவை வளர்ப்பதற்கு இன்னும் இடமிருக்கிறது. தம் சொந்த வாழ்விலும், கிராமப் பொது வாழ்விலும், தொழிலின்மூலம் வரும் வருவாயை இன்னும் பெருக்கிக் கொள்ள இக்கல்வி உதவி செய்யவேண்டும்.

2. **துணைத்தொழில் :** பயிர்த்தொழிலில் ஈடுபட்ட மக்களுக்கு ஓய்வு நேரம் அதிகம். அந்நேரத்தை நூல் நூற்பது, நெய்வது போன்ற ஏதேனுமொரு துணைத்தொழிலில் செலவிடும்படிப் பழக்கவேண்டும். இங்கு வாழ்க்கைக்குத் தொழிலால் வரும் லாபத்தோடு கூட, அறிவு வளர்ச்சிக்கும் தொழில் இடமாயிருக்கும்.

3. **சுகாதாரம், தேகாரோக்கியம் :** கிராம வாழ்க்கையில் இவை இன்று இல்லை. ஆகவே, வயது வந்தோர் கல்வித் துறையில் இவற்றை எவ்வளவு வற்புறுத்திச் சொன்னாலும் மிகையாகாது. தங்கள் தங்கள் சமூகத்தையும்,

கிராமத்தையும், ஆரோக்கியமாக வைத்திருப்பதில் மக்களுக்குள்ள பொறுப்பை உணர்த்துவதே கல்வி.

4. **குழந்தை வளர்ப்பு :** அறிவோடு குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர் நம் நாட்டில் இல்லை. குழந்தை வளர்ப்புச் சம்பந்தமான எல்லாத் துறைகளிலும் - ஆரோக்கியம், நோய், உணவு, உடை, படிப்பு முதலியவற்றில் - பெற்றோருக்கு அறிவு வரச் செய்ய வேண்டும். பெற்றோரிடமுள்ள தீய பழக்கங்கள் குழந்தையிடம் படிகின்றன. குழந்தையை ஹிம்சைசெய்து, கஷ்டப்படுத்தி வேலைவாங்குவது, குழந்தையின் உழைப்பால் பெற்றோர் உயிர்வாழ்வது முதலிய கேடான நிலைமைகள் கல்விப் பயிற்சியால் நீங்கவேண்டும்.

5. **எழுத்துப்படிப்பு :** திருத்தமான உச்சரிப்பு, பேச்சு, வாசிப்பு, பிறகு எழுத்து என்ற வரிசையில் நம் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும். படிப்பில் வயது வந்தோர் ஆர்வத்தைப் பெருக்கினால் எழுத்துப் படிப்பு பெரிய காரியமில்லை. பத்திரிகை படித்தல், எளிய புத்தகங்களைப் படித்தல், திருத்தமாகவும், வேகமாகவும் எழுதுதல் முதலிய திறமைகள் இங்கு எளிதாக வரும்.

6. **கிராம நாகரிகம் :** கோயில் வழிபாடு, சமய விழாக்கள், அரசியல் சமூகக் கொண்டாட்டங்கள், கிராமத்தில் உள்ள புராதனக் கலைகளையும், கை வினைகளையும் போற்றிப் பாதுகாத்தல், புத்தக சாலையைப் பயன்படுத்திக் கொள்ளுதல், விளையாட்டு, கேளிக்கை, கூத்து முதலியவற்றிலுள்ள நல்ல அம்சங்களைப் போற்றுதல் ஆகியவை கல்வி வளரத் தக்க இடங்கள்.

7. **கிராமச் சீர்திருத்தம் :** போட்டி மனப்பான்மையின்றிக் கூட்டுறவு மனப்பான்மை பெற்று, நல்ல ஜனநாயக வாழ்க்கையை வயது வந்தோரிடையே ஏற்படுத்துதல். பெண்கள் முன்னேற்றம், குடி, சூது முதலிய தீமைகளை விலக்கல், கோர்ட்டு விவகாரங்களைக் குறைத்தல், கிராம வாழ்க்கையில் மக்கள் உரிமைகளை உணர்த்தல், பஞ்சாயத்து ஆட்சி முறை, அரசியல் சரித்திரம், உலக அரசியல் நிலை முதலியன உணர்த்தல். அரசியலில் கிராமத்தார் பொறுப்பு. இந்தப் பொறுப்பு உணர்ச்சியே எதிர்கால வாழ்க்கையில் அவர்களுக்கு நன்மை தரவல்லது.

111563

பொதுவாக வயது வந்தோர் கல்வியானது, ஆதாரப் பாடசாலை நடைபெறும் இடத்தைச் சூழ்ந்த சமூகத்தில் நடைபெறுவது சிறப்பு. இங்கு, ஆசிரியர் முயற்சிக்கு, பாடசாலைப் பிள்ளைகளின் முன் மாதிரியும் கல்விப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் பெருந்துணை செய்கிறது. பிள்ளைகளிடம் உண்டாகிற கல்வி விளக்கம், நிச்சயம் அப்பிள்ளைகளின் வீட்டு வாழ்க்கையைப் பாதிக்கும். பிள்ளையின் மூலம் வீட்டு வாழ்க்கை திருத்தமடைவதென்ருல், பெற்ருேர் உடன் பிறந்தார் முதலான உறவினர் அனைவர் வாழ்க்கையும் மாறுதலடையும். எல்லா வீட்டுப் பிள்ளைகளும் பாடசாலையில் பயிலும்போது, எல்லா வீடுகளும் விளக்கம் பெறவே, ஊரே விளக்கம் பெறுகிறது. இந்த முறையில் ஆதாரப் பாடசாலையானது வயது வந்தோர் கல்வித்துறையில் பெருங் காரியங்களைச் சாதிக்க முடியும்.

## 6—14 வயது

6 வயதில் கல்வி தொடங்குவது மிகவும் காலந் தாழ்த்தது என்று பலர் நினைக்கக் கூடும். இதற்கு முந்திய வயதில் குழந்தைகளுக்குத் தரவேண்டிய பயிற்சி முக்கியமானது. இதுவே பாலர் கல்வி ; ஆனுல் இது கட்டாயம் என்ற திட்டத்தில் வரவில்லை.

குழந்தை 14 வயது வரை பாடசாலையில் பயில்வது முக்கியம். இப்பருவம் குழந்தைப் பருவமும், வாலிபப் பருவமும் அல்லாத இளம் பிள்ளைப் பருவம். மனேதத்துவ ரீதியாகப் பார்த்தால், சமூக வாழ்க்கைக்கும், ஜனநாயக வாழ்க்கைக்கும் வேண்டிய பயிற்சியைச் சிறுவன் இதற்கு முந்திய பருவத்தில் ஏற்க முடியாது. பிரஜாதத்துவ வுணர்வு இந்தப் பருவத்தில்தான் வரவியலும். இன்றுள்ள ஆரம்பப் படிப்புப் படித்த பிள்ளைகள் பின்னர் அப் படிப்பையும் மறந்து எழுத்தறிவு அற்றவர்களாகி விடுகிருர்கள். ஆனுல் 14 வயது வரை கற்ற எழுத்துப் படிப்பைச் சிறுவன் பின்னர் மறந்து போகமாட்டான். மேலும், தான் பாடசாலையில் கற்ற ஆதாரத் தொழிலில் பூரணத் திறமை பெற்று, அவசியமாஞல் அதைக் கொண்டு தன் வாழ்க்கை நடத்திக்கொள்ள வேண்டிய நிலைமை

ஏற்பட்டால் அதற்கு 14 வயது வரை பயிற்சி இருப்பது இன்றியமையாதது.

ஆனால், 14 வயதோடு கல்வி முடிந்து போகவில்லை. 18 வயது வரை கல்வி போதிப்பது என்ற கருத்து பிற நாடுகளில் நடைபெற்று வருகிறது. ஆதாரக் கல்வித் துறையிலும் இதை ஒப்புக்கொண்டே, கல்லூரிக் கல்வி என்ற திட்டம் வகுத்திருக்கிறார்கள். 14 - 18 ஆகிய வயதுள்ள பருவமே சிறுபிள்ளையின் உடலிலும் உள்ளத்திலும் விசேஷ மாறுதல்கள் நிகழ்ந்து அவனுடைய எதிர் காலக் குணச் சிறப்பையும் தனியியல்பையும் திட்டமான உருவத்தில் அமைக்கிற பருவமாகும். ஆயினும், ஆதாரக் கல்வித் திட்டம் நாட்டின் இன்றைய பொதுவான நிலைமையை மனத்தில் வைத்து வகுக்கப்பெற்றதாகும். இந்த நிலைக்கு இன்று 14 வயது வரை கல்வி பயின்று முடித்தாலே பெரிய வெற்றியாகும். இந்த வெற்றி ஏற்பட்ட பின்னர் ஒரு வேளை, பிற்பட்ட சிலவருஷகாலம் கட்டாயக் கல்விக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம். இக்கல்விக் குரிய திட்டத்தைக் கல்லூரிக் கல்வியாகக் கருதியிருக்கிறோம்.

## கல்வி போதனைக்கான இடம்

ஆதாரக் கல்வி என்பது தொழிற் கல்வி அல்ல. தொழிற் கல்வி என்று இதைச் சொல்வதும் முழுமையும் பொருந்தாது. ஏனெனில் இங்கு பிள்ளைகளுக்குத் தொழில் கற்பிக்கும்போது பிள்ளைகளின் அறிவு விளக்கத்துக்கு வேண்டிய எல்லாப் பாடங்களையும் போதிக்க எண்ணுகிறோம். இயல்பாகச் சிலவற்றைத்தான் தொழிலை ஆதாரமாக வைத்துப் போதிக்க முடியும். தொழிலோடு பொருத்திக் கற்பிக்கத்தக்க பாடங்கள் போக, மற்றவற்றைக் குழந்தையினுடைய சூழ்நிலையிலிருந்து கற்பிக்கவேண்டும். சூழ்நிலை என்பது, குழந்தை வாழும் இடம், வீடு, ஊர், அயலார், உறவினர், இயற்கை பருவ காலங்கள் முதலியவையாகும். இவ்விதம் கவனிக்கும்போது கல்வி கற்பதற்குரிய இடங்கள் மூன்று எனச் சொல்லலாம். இவை; 1. தொழில் 2. இயற்கைச் சூழ்நிலை 3. சமூகச் சூழ்நிலை என்பன.

தொழில் : நூற்றல் தொழிலோடு கூட, தாய்மொழி, விஞ்ஞான அறிவு, கணிதம், சமூக சாஸ்திரங்களான சரித்திரம், பூகோளம், சித்திரக்கலை முதலியன கற்பிக்க முடியும்.

இயற்கைச் சூழ்நிலை : இருவகைச் சூழ்நிலைகளும் கல்வியை வாழ்க்கையோடு தொடர்பு படுத்துவதற்குப் பெரிதும் உதவுவன. இவற்றுள் அடங்காத பாடம் எதுவும் இல்லை என்று கூறலாம். இயற்கைச் சூழ்நிலை மூலம், எளிதாகக் கற்பிக்கத்தக்க பாடங்கள் - துப்புரவு, தேகாரோக்கியம், தாய்மொழி, பூரண விஞ்ஞான அறிவு, சமூக சாஸ்திரங்களாகிய பூகோளம், ஆட்சி முறை, சரித்திரம், சித்திரக்கலை, தாவர சாஸ்திரம், பிராணி நூல்.

சமூகச் சூழ்நிலை : தன் வீட்டிலுள்ளார், புதிதாக வீட்டுக்கோ பாடசாலைக்கோ வருபவர்கள், பிரயாணம், அயலூர்களில் நடக்கும் விழா முதலிய யாவும் இத் தலைப்பினுள் அடங்கும். துப்புரவு, தேகாரோக்கியம், பயிர்த் தொழில், விஞ்ஞான அறிவு, சமூக சாஸ்திரங்கள், தாய்மொழி, சித்திரக்கலை, இசை முதலான எல்லாப் பாடங்களையுமே, சமூகச் சூழ்நிலையோடு பொருத்திக் கற்பிக்க முடியும்.

பாடம் என்பது பாடத்திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறதே என்பதற்காக மட்டும் கற்பிக்க வேண்டிய வறட்டுச் செய்தியாக இருக்கக் கூடாது. குழந்தை சாமானியமாகப் பழகியதிலிருந்தே, குறித்த பாடம் பற்றிய நினைவு எழ வேண்டும். அந்த நினைவுக்கு வேண்டிய ஊட்டங் கொடுப்பது அல்லது அதைப் போஷிப்பதுதான் கல்வி. வாழ்க்கை என்பது இந்த மூன்றினுள் அடங்கி விடுகிறது. ஆகவே, வாழ்க்கை வாழ்வதற்கான கல்வி இந்த மூன்றிலிருந்தும் தான் பிறக்கவேண்டுமென்று சொல்வது மிகையன்று. இந்த மூன்றில் அடங்காதது எது? குறித்த ஒரு பாடமோ, குறித்த ஒரு செய்தியோ பாடப்பிரிவோ இந்த மூன்றிலிருந்தும் எழவில்லையென்றால், அதைக் கற்பிப்பதை நிறுத்திக்கொள்ளலாம். அன்றியும், புத்திக்கூர்மையோடு மனத்தினுள் ஆராய்ந்து கேள்வி கேட்கும் பழக்கத்தை ஆசிரியர் பிள்ளைகளிடம் வளர்ப்பாரானால், புதிதாக ஒவ்வொன்றையும் அறிவதில் அவாக்கொள்ளும் பிள்ளைகளுக்கு, எந்தச் செய்திகளையுமே வருவித்துக் கொள்ளலாம்.

**நாட்டு நடப்பு:** தவிர, உலக நடப்புப்பற்றிய அறிவு பிள்ளைகளுக்கு வரச் செய்வது மிகவும் அவசியம். பத்திரிகைச் செய்தி சொல்லுதல் அல்லது படித்தல் மிகவும் பயனுடைய ஒரு திட்டம். வகுப்பின் அறிவுத் தரத்துக்கு ஏற்றபடி, பத்திரிகைச் செய்தியைப் பெருக்கலாம் அல்லது சுருக்கலாம். செய்தியானது, அறியவேண்டும் என்ற அவாவைத் தூண்டும். இதுவே கல்வி போதனைக்கான இடமாகவும் அமையும்.

**பரீக்ஷை**

நம் நாட்டில் இது வரையில் இருந்து வந்த பரீக்ஷை முறை கல்வி வளர்ச்சிக்கே பெருங் கேடானது. மாணவனுடைய தகுதியை அளப்பதற்குப் பரீக்ஷை தக்க கருவியன்று, அது பூர்த்தியானது மன்று. பரீக்ஷை மதிப்பு குருட்டு மதிப்புத்தான். படித்த மாணவனின் திறமையை வருஷக் கடைசியில் கொஞ்ச நாள் ஓய்வு கொடுத்து, எல்லாவற்றையும் நெட்டுருப் பண்ணச் செய்து, பின்னர் பரீக்ஷை என்று ஏதோ சிலவற்றை எழுதிக் காட்டச் சொல்வது, பரீக்ஷையே அன்று. அன்றியும் இப்போது பரீக்ஷகர் பரீக்ஷை நடத்தும் முறையானது, பையனின் அறியாமை எவ்வளவு என்று சோதிப்பதாயிருக்கிறதே ஒழிய, அறிவைச் சோதிப்பதாயில்லை.

கல்வி பயிலும் காலம் முழுமையும் மாணவனுடைய தகுதியை அவ்வப்போது திட்டமிட்டுக் கணித்தறிவது தான் பரீக்ஷை. நூற்றல் தொழில் கட்டாயமென்று நாம் பேசும்போது, குறித்த காலத்துக் கொரு முறை அத் தொழிலில் மாணவன் பெற்றுள்ள திறமையைக் கவனித்துக் கொண்டே வந்தால் இதுவே அவன் தகுதியை நிர்ணயிக்கிறது. வாழ்க்கையே கல்வி என்று நாம் சொல்லும் போது, வாழ்க்கையே பரீக்ஷையுமாகிறது.

இதனோடு கூட, கிராம சமூகத்தில் ஆசிரியரும் மாணவருமாகச் சேர்ந்து செய்திருக்கிற வேலை அல்லது மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மேம்பாடு அல்லது மாறுதல், குறித்த பாடசாலையின் தகுதியை நிர்ணயிப்பதற்கான கருவியென்று சொல்லலாம். தனிப்பட்ட மாணவனுக்கு,

குறித்த திறமை வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஆகவே, இத்திறமை வந்தபோது, அவன் தகுதி பெற்றவனாகிறான். வருகிற வரையில் அவன் அதே வகுப்பில் படிக்கிறான். தகுதியைத் தினசரி பார்ப்பதால் பரீக்ஷை பொதுவாக வருஷக் கடைசியில் தேவையில்லை.

கல்வி என்பது, மூவகைப் பண்புகளின் உண்மையான வளர்ச்சி என்பதை நாம் ஒப்புக் கொண்டால், மூன்று வகையில் ஒன்றான மூளையின் திறமையை மட்டில் கேள்வி கேட்பதன் மூலம் நிர்ணயித்தறியும் முறை பரீக்ஷையேயாகாது என்பது புலப்படும். பிள்ளையினுடைய செயல் திறமையை இது பரீக்ஷிக்கவில்லை. ஒழுக்கத் திறமையை இது எண்ணிப் பார்க்கவே இல்லை. அந்தச் சமயத்துக்குப் பையன் எதை ஞாபகம் வைத்திருந்து சொல்ல முடிகிறது என்பதை மட்டும் அப்பரீக்ஷை கவனிப்பதால், உண்மையான அறிவையும் பரீட்சிக்கவில்லை.

பரீக்ஷை முறையினால், இன்று கல்வியில் குழந்தை பிரதானம் என்ற நினைவு மறைந்து, மார்க்கே பிரதானம் என்ற நினைவு குடி கொண்டு விட்டது. நெட்டுருப் பண்ணி எழுதி மார்க்கு வாங்கும் பழக்கம் பெருகிவிட்ட நிலையில், கற்பித்ததைக் கேட்டால் பையன் சொல்லுவான். கற்பியாததைக் கேட்டால் விழிப்பான். ஆனால் கல்வி மூலம் சுயபுத்தியும் சுயமுயற்சியும் வளரப்பெற்ற, பரீக்ஷைக்கென்றே தயாராகாத பையன், எதைக் கேட்டாலும் தானகச் சிந்தித்து விடை கூற முயல்வான். கல்வியில் இத்தகைய முயற்சியே பெரிது. வழக்கமான பரீக்ஷை முறை இம்முயற்சிக்கு இடமளிக்கவில்லை.

எனவே, செய்யும் செயல் திறனும் ஒழுகும் நடைத் திறனும், அறிவின் திறனைப்போலவே பரீக்ஷைக்கான பிரிவுகள். இந்த நோக்கின்படி, வாழ்க்கையே பரீக்ஷையாகிறது. தனியான பரீக்ஷை பொருத்தமில்லை, சரியுமில்லை.

ஆதாரப்பாடசாலையில் பிள்ளைகள் தாங்கள் செய்கிற தொழில்பற்றித் தாங்களே குறிப்புப் பதிந்து வைக்கிறார்கள். இதனால் அவர்களுக்குத் திருத்தமான அறிவு ஏற்படுகிறது. மேலும் அவர்கள் விஷய விளக்கப்படம் தயாரிக்கிறார்கள். பொருட்காட்சிக்கானவற்றையும் சித்தப்படுத்து

கிறார்கள். இவை யாவும் ஓரளவுக்குப் பிள்ளையின் கல்வித் திறன் மேம்பட்டிருப்பதைக் காட்ட வல்ல அளவு கோல்கள் என்று கருத இடமுண்டு. பரீக்ஷை செய்வதை இவை செய்யக்கூடும்.

சிறு பையன் தான் செய்யும் வேலை பற்றிய எல்லாச் செய்திகளையும் கவனிப்பையும் முடிவையும் தானே எழுதி வைக்கிறான் என்பது மிகவும் புதிதான ஒரு கருத்து. கல்வி போதனைமுறைக்கே ஆதாரக் கல்வியால் விளைந்த பெரும் புரட்சி என்று இதைக் கருதலாம்.

### செலவைச் சரிக்கட்டுதல்

ஆதாரக் கல்வித் துறையில் தொழில் மூலம் கல்வி என்று சொல்லும்போது, தொழிலால் வரும் வருமானத்தைத் திட்டமாய்க் கணக்கிட வேண்டும்.

முதலாவதாக, பாடசாலையில் பிள்ளைகள் உற்பத்தி செய்கிற பொருளின் விலைமதிப்பானது, உபயோகித்த மூலப் பொருள், பிள்ளைகளுடைய உழைப்புக்குரிய கூலி மதிப்பு ஆகிய இரண்டுக்கும் சமமாய் இருக்க வேண்டும். அன்றியும், அந்தப் பொருள் எளிதாக விற்பனையாகத் தக்கதாகவும் இருக்கவேண்டும்.

இரண்டாவதாக, வகுப்பிலுள்ள எல்லாப் பிள்ளைகளும் சேர்ந்து உற்பத்தி செய்கிற பொருள்களால் மாதந்தோறும் அல்லது வருஷந்தோறும் பாடசாலைக்குக் கிடைக்கிற வருமானமானது, பாடசாலைக்கு ஆகும் மாதாந்த அல்லது வருஷாந்தச் செலவுக்கு ஈடு செய்யவேண்டும். பாடசாலையின் ஆரம்ப வகுப்புக்களில் அதாவது சுமார் 3 வகுப்புவரை, இது சாத்தியமாகாமற் போகலாம். ஆனால், பிற்பட்ட வகுப்புக்களையும் சேர்த்து ஏழு வகுப்பாகிய பூரண ஆதாரக் கல்வி என்று எடுத்துப் பார்க்கும்போது, வகுப்பின் தொழில் வருமானமானது, பள்ளிக்கூடத்தின் ஆசிரியர் சம்பளம் நடைமுறைச் செலவு என்ற இரண்டுக்கும் சரிக்கட்ட வேண்டும். இதைப் பின்வருமாறு உத்தேசமாய்க் கணக்கிட்டுக் காட்டலாம்.

நூற்றல்—நெசவு ஆதாரத் தொழிலாயுள்ள பாடசாலையில், ஓர் ஆசிரியருக்கு 20 பிள்ளைகள் இருக்கலாம்.

இந்தப் பிள்ளைக்கள் வகுப்பில் பயிலும் தொழிலின் மூலம் வரும் வருமானம் இந்த ஆசிரியருடைய செலவுக்கும் சில்லறை நடைமுறைச் செலவுகளுக்கும் சமமாய் இருக்க வேண்டும். பாடசாலையில் தினசரி குறைந்த பட்சம் $2\frac{1}{2}$ மணிநேரம் தொழில்வகுப்பு நடக்குமென்று எதிர் பார்க்கலாம். நூற்றல் தொழிலில் இந்த $2\frac{1}{2}$ மணிநேரத்தில் பருத்தி அரைத்தல், பஞ்சு சுத்தம், பஞ்சு வெட்டிப் பட்டை போடுதல் ஆகிய வேலைகளுக்கு $1\frac{1}{4}$ மணிநேரம் ஒதுக்கி விட்டு $1\frac{1}{4}$ மணிநேரம் நூற்றலில் செலவிடுவதாக வைத்துக் கொள்ளலாம். சுமாரான திறமையோடு நூற்க வல்ல பையன் ராட்டையில் இந்த $1\frac{1}{4}$ மணிநேரத்தில் அரைச் சிட்டம் போடமுடியும். ஒரு மாதத்தில் 24 நாள் பாடசாலை நடக்குமென்று கொள்ளலாம். இதன்படி ஒரு மாதத்துக்கு ஒரு பையனுக்கு 12 சிட்டம் ஆகிறது. ஒரு சிட்டத்தின் கிரயம் 0-3-3 அணா. இந்தத் தொகையில் பருத்தியின் கிரயம் ஒன்பது பை நீங்கலாக, மீகுதி 0-2-6 அணா, பருத்தியை அரைத்தல் முதல் நூற்றல் முடியவுள்ள மாணவன் தொழிலுக்கு 1 சிட்டத்தில் கிடைக்கும் கூலி ஆகிறது. ஆகவே, 12 சிட்டத்துக்கும் ஒரு மாணவன் பெறும் கூலி ரூ 1–14–0. 20 பிள்ளைகளுக்கும் சேர்ந்து கிடைக்கக் கூடிய கூலி மாதம் ரூ. 37–8–0.

ஆதாரப் பாடசாலையில் நூற்றல் - நெசவுத் தொழிலோடு கூட, பயிர்த்தொழிலும் துணைத்தொழிலாக நடைபெறும்; பயிர்த் தொழிலானது தினம் 1 மணி நேரம் நடைபெற வேண்டும். இதன்மூலம் மாதந்தோறும் குறைந்தபட்சம் ரூ. 7-8-0 வரும்படி கிடைக்கலாம். ஆக, இரண்டும் சேர்ந்து, 20 பிள்ளைகள் கொண்ட ஒரு வகுப்பின் உழைப்பால் வரும் வருவாய் ரூ. 45-0-0. பாடசாலை வருஷத்தில் 11 மாதந்தான் வேலை செய்யுமாதலால், இந்த வீதப்படி 11 மாதத்தில் கிடைக்கும் வருவாயை 12 மாதத்துக்கும் சராசரியாக வீதமிட்டுப் பார்த்தால், மாதம் ரூ. 41-4-0 ஆகிறது.

இந்தப் புள்ளி விவரம் பாடசாலையின் தொழில் வருமானத்தின் மூலம் செலவைச் சரிக்கட்டுவது எப்படி என்பதற்கு வழி காட்டும். இந்த விவரங்களில் சிற்சில மாறுதல்கள் இருக்கலாம். உதாரணமாக, 24 நாள் 25 ஆகவோ

20 ஆகவோ மாறலாம். 20 பிள்ளைகள் 25 ஆக மாறலாம். $2\frac{3}{4}$ மணி என்பதை 3 மணி ஆகவும் வைத்துக் கொள்ளலாம். இவ்விதம் கூட்டிக் குறைப்பதனால் நூற்றல் வருமானம் சற்றே மாறுபடலாம். இது போலவே விவசாய வருமானமும் குறையவோ, கூடவோ முடியும். கூடிய வரையில் தொழில் நேரத்தைத் தகுந்தபடி அமைத்துக் கொண்டு, மேற்கூறிய திட்டப்படிக்கான குறைந்த பட்ச உற்பத்தி இருக்க வேண்டும் என்ற ஏற்பாடு செய்து கொண்டோமானால், தொழில் வருமானம், பாடசாலைச் செலவைச் சரிக்கட்டும் என்பது உறுதி. வறுமையும், எழுத்தறிவின்மையும் மலிந்துள்ள இந்த நாட்டில், இந்த முயற்சி எவ்வளவோ பயனுடையது என்பதில் சந்தேகமில்லை.

மேலும், வகுப்பு நேரத்தில் பிள்ளைகளுக்குத் தொழில் கற்பிக்கும் ஆசிரியர், தாமும் ஒருமணி நேரமாயினும் தொழிலில் தினமும் செலவிடுகிறார். இந்த ஒரு மணி நேரத்திலும், பருத்தி அரைத்தல் பஞ்சுவெட்டுதல், நூற்றல் முதலான வேலைகளை இவர் செய்கிறார். இதற்கும் பொருள் மதிப்புண்டு. வருமானத்தைக் கணக்கிடும் போது இதையும் கூட்டிக் கொள்ள வேண்டும்.

இனி, நூற்றலுக்குப் பின், மேல் வகுப்புக்களில் செய்கிற நெசவு வேலைக்குரிய கூலியையும் சேர்க்க வேண்டும். நெசவில் இன்னும் கூலி அதிகம் கட்டிவரும். நேரத்தை வீண் போக்காமல், திறமையாகவும் திட்டமிட்டும் தொழிலில் பிள்ளைகளை ஈடுபடுத்திவரும் பட்சத்தில் மேலே குறிப்பிட்ட வருவாய்க்கான பொருள் உற்பத்தியாகும் என்பது உறுதி.

வருவாய் குறித்த மேற்கண்ட தன்மைகள் ஒருபுறமிருக்க, இக்கருத்தில் அமைந்த மனோதத்துவம் இங்கு உணர்தற்குரியது. அளவை என்பது பொருளுக்குப் பொருள் மாறும். துணியளப்பது ஒன்று. பால் அளப்பது ஒன்று. பாலின் தரம் அளப்பது ஒன்று. நெல் அளப்பது ஒன்று. வைரமும், மணியும் அளப்பது ஒன்று. நிலம் அளப்பது ஒன்று. இப்படியேதான் பாடசாலையின் கல்விப் பயிற்சியை அளக்கவும் ஒரு தனி அளவை உண்டு. பரீக்ஷை என்பது இந்த அளவை ஆகாது. கல்வியால், அதுவும் ஆதாரக் கல்விப் பயிற்சியின் மூலம், குழந்தையின் மூவகைப்

பண்புகளையும் பழக்கி வளர்க்கிறோம். உடல் திறன் வளர்ச்சியையும் ஒழுக்க வளர்ச்சியையும் இன்றைய பரீக்ஷை எப்படி அளக்கும்? கேள்வி கேட்டுப் பதில் எழுதச் சொல்லும் முறையால் மூன்றின் வளர்ச்சியையும் காணமுடியாது. அன்றியும், செய்து காட்டுவதை விட்டுப் பதில் சொல்லிக்கொண்டு இருப்பதில் சிறு பிள்ளைகளுக்குப் பொறுமை இராது. இது அவர்களுக்குக் கஷ்டமானது.

மேலும், செலவைச் சரிக்கட்டுவது என்பது, வெறும் பண வருவாயைத் தொழில் மூலம் பெருக்குவது என்ற கருத்தினும் உயர்ந்தது. எந்த வாழ்க்கையில் ஒழுங்கும் சிரத்தையும் நிறைந்த உழைப்பு இருக்கிறதோ, அங்கே திறமையும் அறிவும் மேம்படுவது உறுதி. ஆதலால், திறமையின் பெருக்கமே ஒழுங்கு சிரத்தை என்ற இரண்டையும் அளக்கும் அளவுகோலாகும். குறித்த பாடசாலை செலவைச் சரிக்கட்டுகிறது என்றால், அங்கு திறமை ஏற்பட்டிருக்கிறது, ஒழுங்கும் சிரத்தையும் உள்ளன என்பதும் தானே ஏற்படுகிறது. அன்றியும், படிப்பு என்பது திட்டமாய்ப் பெறுகிற அனுபவம். அறிவு இதன் மூலமாக வருவதாதலால், பிள்ளைகள் சிரத்தையுடன் மனவிழிப்புடையவர்களாயு மிருத்தல் வேண்டும். இந்த நிலை இருந்து தொழில் செய்தால்தான் அறிவு வளர்ச்சி ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் தோன்றும். இத்தகைய சந்தர்ப்பங்களை அளிக்கிற தொழிலின் பல்வேறு செயற் பிரிவுகளையும் பிள்ளைகள் சரியாகவும் சாஸ்திரோக்தமாகவும் செய்திருக்கிறார்களா என்று பார்ப்பதே செலவைச் சரிக்கட்டுகிறதா என்று பார்த்தல். இது பற்றியே பொருள் உற்பத்தியை இங்கு பிரதானமாய்க் கவனிக்கிறோம்.

இத்தகைய ஒரு திட்டத்தை உறுதியாய்க் கடைப்பிடிக்கும்போது, ஆசிரியர்களுக்குத் தன்னம்பிக்கையும் சுதந்திரவுணர்ச்சியும் வளரும். இவ்விரு இயல்புகளும் இன்றிப் புதிய லக்ஷ்ய சமுதாயத்தை எவரும் சிருஷ்டிக்க முடியாது. மேலும், ஆசிரியர் தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளவும் வேண்டும்; அவர் இங்ஙனம் உழைப்பவராயில்லாவிட்டால், பாடசாலையில் இவற்றை வலியுறுத்தவியலாது. இந்த நோக்குடன் பார்க்கும்போது, ஆதாரக் கல்வியானது, உத்தமமான தொண்டரையும் உண்மையான

ஊழியரையும் திறமை மிகுந்த சிறந்த ஆசிரியராகத் தேர்ந்தெடுக்க ஒரு தகுந்த சாதனமென்று கருதலாம். இவ்வாசிரியர் தக்க உடல் வலிமை, மனவுறுதி, தொழில்தேர்ச்சி, அறிவு, ஒழுக்கம் ஆகியவை குறைவறப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது தெளிவு.

ஆதாரக் கல்வியானது, இந்நாட்டின் எதிர்காலப் பிரஜைகளைச் சரியான, பயனுள்ள, உத்தமக் குறிக்கோளுடைய வழியில் பயிற்றுவதற்கான ஆரம்பவேலையானதால், இதற்காகும் மூலதனச் செலவு முழுமையும் பொது மக்களின் பொறுப்பு ; அதாவது அரசாங்கமே இதற்காகும் முழுச்செலவும் ஏற்கவேண்டும். கட்டிடச் செலவு, இடத்துக்காகும் செலவு, கருவி தளவாடங்களின் செலவு முதலியன யாவும் இத்தகைய மூலதனச் செலவாகும். ஆசிரியர் சம்பளமும் நடைமுறைச் செலவுகளும் மட்டுமே, பிள்ளைகளின் உழைப்பால் வரும் வருவாயைக் கொண்டு சரிக்கட்ட முயல்வது நம் நோக்கம்.

## ஆசிரியர்

ஆதாரக் கல்வியானது ஆசிரியரிடம் மிகுதியான தகுதியையும் சேவையையும் எதிர்பார்க்கிறது. வாழ்க்கையில் பண்பு நிறைந்தவராய், ஆதாரக் கல்வியின் லக்ஷ்யத்தை மனமார ஏற்று அதை நிறைவேற்றும் ஆர்வம் உடையவராயும் இருக்க வேண்டும். கீழ் வகுப்புகளுக்குத் திறமை அதிகமும், படிப்பு அதிகமும் உள்ள ஆசிரியர் வேண்டுமென்பது நியாயம். ஆனால் இன்று சொற்பப் படிப்பு உள்ளவர்களையே கீழ் வகுப்பு ஆசிரியராக நியமிக்க வேண்டியிருக்கிறது. இது திருப்திகரமான நிலைமை அல்ல.

## மூவகைப் பண்புகள்

முன்னமே குறிப்பிட்டபடி கல்வியின் மூலம் மூளை ஒன்றை மட்டும் வளர்ப்பதோடு நிறுத்தாமல், குழந்தையினுடைய பண்புகள் அனைத்தையும் வளர்க்கிறோம். வாழ்க்கையென்பது பூரணமான ஒன்று, பல பின்னங்கள்

ஒன்று கூடின தொகுப்பு அன்று. ஆகவே குழந்தையின் கல்வியிலும் வளர்ச்சியிலும் ஒருமித்த பூரணப் பயிற்சிக்குத் திட்டமிடவேண்டும்.

1. உடற் பண்புகள்: ஆரோக்கியமான உடல், சாமானிய வேலைகளில் ஈடுபட்டுச் சோர்வின்றி நன்றாக உழைக்கும் தன்மை, ஞானேந்திரியங்கள் ஐந்தையும் கை கால்களையும் நன்றாய்ப் பழக்குதல், நீந்துதல், பயிர்த்தொழில் செய்யுந் திறமை, சமையல் திறமை, பக்திப்பாடல்கள் தேசியப் பாடல்கள் பஜனை முதலியன பாடுதல்.

2. உள்ளப் பண்புகள்: சமூக லக்ஷயத்தை உணர்தல். கிராமக் கைத்தொழில்களே இந்த நாட்டுக்கு நல் வாழ்வு தருவன என்று உணர்தல். சமையல் பற்றிய அறிவு, உடைபற்றிய அறிவு, தேகாரோக்கியம் உணவுச் சத்துப் பற்றிய அறிவு, நோய்களுக்குச் சிகிச்சை செய்தல், கணக்குத் திறமை, பேச்சு, எழுத்துத் திறமை, இலக்கியச் சுவை அறிதல். ராட்டை முதலியவற்றில் அடங்கிய இயந்திர தத்துவம் அறிதல். இந்திய சுதந்திரப் போராட்டம், அரசியல் முதலியவற்றை அறிதல்.

3. உயிர்ப் பண்புகள்: எல்லாச் சமயங்களிடத்திலும், ஒத்த பக்தி, வகுப்பு ஒற்றுமையில் ஆர்வம், ஜாதி உணர்ச்சியைப் போக்குதல், அன்பு, பரோபகாரம், சகிப்புத்தன்மை, நீதி உணர்ச்சி, கூட்டுறவு. உண்மையான தெய்வ நம்பிக்கையும், சத்தியத்திலும் அஹிம்சையிலும் தோய்ந்த மனமும், நல்லொழுக்கமும் இந்தப் பண்புகளுக்கு அடிப்படை என்று கூறுவது மிகையாகாது.

உழைப்பின் மூலம் கல்வி பயிற்றும்போது, இது, உடலின் அங்கங்கள் நரம்பமைப்பு முதலியவற்றின் சக்தியைப் பயிற்றி வளர்க்கிறது. நேர்முகமான அனுபவத்தின் மூலம் தன்னம்பிக்கையும் திட சித்தமும் வளர்கின்றன. சிறந்த ஆன்மப்பண்புகள் விளையுமிடமாக இவைகளே அமைகின்றன.

மேலும், "பாடசாலையில் சமய போதனைக்கு நான் ஏற்பாடு செய்யவில்லை. ஏனெனில், மேலான சமயமாகிய நடைமுறை அல்லது காரியச் சமயத்தை நான் போதிக்கிறேன்: அதுவே தன்முயற்சியாகும்" என்று காந்தி

யடிகள் கூறுகிறார். தன்முயற்சியின் வழி மற்றெல்லா ஆன்மப் பண்புகளும் தாமே அமையும்.

செயல் செய்யச் செய்ய உடல் வலிமை பெறுகிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை; செயலால் அனுபவமும் பெருகுகிறது. அனுபவமே திரண்டு முதிர்ந்து அறிவாகப் பரிணமிக்கிறது. இதனால், தானே விளைவது புத்திக்கூர்மை. உழைப்பினால் வரும் பக்குவமே நல்லொழுக்கத்துக்கு வித்தாகி, ஆன்மப் பண்புகளையும் வளர்க்கிறது. ஆகவே, மூவகைப் பண்புகளும் செயல் வழியே எவ்வாறு விளக்கம் பெறுகின்றன என்பதை இங்குக் காணலாம்.

## இயைபு முறை

இயைபு என்பதைச் சமவாயமுறை என்றும் இணைப்பு முறை என்றும் சொல்வார்கள். இதன் பொருள், பையனுடைய தொழிலிலும், சமூகம், இயற்கை ஆகிய இரு சூழ்நிலைகளிலும் பிள்ளையினுடைய வாழ்க்கையில் என்ன அனுபவம் ஏற்படுகிறதோ அந்த அனுபவத்தை ஒட்டியே, அவனுக்கு எல்லாக் கல்வியும் போதிக்கவேண்டும் என்பதாகும். இப்படிக் கற்பிப்பதற்கு முந்திய அனுபவம் ஆசிரியர்களுக்கு இல்லை. எனினும், ஆர்வத்தோடு இந்த வழியில் முயன்றால் சாத்தியமாகாதது ஒன்றுமில்லை.

நூற்றலை எடுத்துக்கொண்டால் முதற் பொருள் பருத்தி. பருத்தியின் எடை, பஞ்சின் எடை, விதையின் எடை, பட்டையின் எடை, நூலின் எடை—இது நிறுத்தலளவை. பிறகு பட்டையை எண்ணுதல், நூல் சுற்றுக்களை எண்ணுதல்—இது சாமானிய எண்ணறிவு. நூலின் நம்பர் என்ன என்று அறிவதில் பலவகைக் கணக்குகள் அடங்குகின்றன. பிறகு பருத்தி விதை முளைத்தல், வளர்தல், பூத்தல், காய்த்தல், காய் வெடிக்கப் பருத்தி எடுத்தல்—இது தாவர சாஸ்திரம். காயில் வரும் பூச்சி, புழு, நோய்—இது கிருமி சாஸ்திரம். பருத்திக்கு ஏற்ற மண், அதன் தரம், பருத்தியின் ரகங்கள், துசும்பின் நீளம், நீளமும் நூற்கும் எளிமையும்—இவை விஞ்ஞான சாஸ்திரப் பகுதிகள். குட்டைத் துசும்பு, நீளத் துசும்பு

எங்கிருந்து வந்தது—இது சரித்திரம் பூகோளம் பற்றிய பாடம். நீளத்துசும்பு இந்தியாவுக்கு வந்ததனுல் நமக்கு என்ன நஷ்டம், நெசவாலைகள் எப்படி உண்டாயின, இந்தியத் துணி உற்பத்தி எப்படி நசித்தது, இந்தியா எப்படி அடிமையாயிற்று—இது பொருளாதாரம், அரசியல் சாஸ்திரம்.

இவ்விதமாக, தக்கிளி, ராட்டை, பயிர்த்தொழில், பயிர்கள், துணி, நெசவு முதலிய ஒவ்வொன்றையும் பற்றிக் குறிப்பிட முடியும்.

அடுத்தபடியாக இயற்கைச் சூழ்நிலை, சமூகச் சூழ்நிலையையும் இவ்விதமாகவே கல்விப் பயிற்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அமாவாசை, பௌர்ணமி, கிரஹணங்கள், பருவகாலங்கள், வால் நக்ஷத்திரத் தோற்றம் முதலியன யாவும் விஞ்ஞான சாஸ்திரப் பாடம் கற்பிக்கும் இடங்கள். கோயிலில் நடக்கும் திருவிழாவை ஒட்டிச் சமய போதனை, கோயில் கட்டிய காலத்துப் பெரியார்களின் வரலாறு, சமூகநிலை, நாகரிகம், இலக்கியம் முதலிய பல பாடங்கள் பிறக்கும். மாதந்தோறும் கொண்டாடத் தக்க சமய விழாக்கள், சமூக, இலக்கிய விழாக்கள், பெரியார் தினங்கள். அரசியல் தினங்கள் முதலியன யாவும் கல்விப் பயிற்சிக்கே துணையாயிருக்கும்.

இவ்வாறு ஆராய்ந்தால், இன்றைய ஏட்டுப்பாட முறையில் என்னென்ன 'பாடங்கள்' அடங்கியுள்ளனவோ, அத்தனையும் கற்பிக்க இங்கேயும் வசதியுண்டு; வெறும் ஏட்டுப்பாடமாய் இராமல் அதே கல்வி இங்கு வாழ்க்கையோடு இயைந்த அறிவாக மாறும். கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்கு வழி காட்டுவது என்பதை உணர்ந்த பின், என்ன பாடங்களைப் போதிப்பது, எது முதன்மையானது, எதை விடுவது, எதைப் போதிப்பதற்குப் புது வழி தேடுவது என்று முடிவு காண்பது கஷ்டமில்லை.

இயைபு முறை என்பது இசைவிக்கும் முறை; அதாவது செய்யும் வேலை, வாழும் வாழ்க்கை இரண்டுடனும் கல்வியை இயைத்துப் பிள்ளைகளின் உள்ளத்துக்குரிய வளர்ச்சியை அளித்தல். போதனுமுறையில் இயைபு முறையின் சிறப்புத் தனியானது. உள்ளப்போக்கில்

இது ஒருமைப்பாட்டையும் திடத்தையும் தருகிறது. வளரும் குழந்தைக்கு எல்லாப் பண்புகளையும் ஒருமைப் படுத்துவதற்கும், செயல் மூலம் வரும் அனுபவத்தால் அறிவு பெருகச் செய்வதாகிய இம்முறை பேருதவியானது. தனித் தனிப் பாடமாய்ப் பயிலும்போது வரும் அனுபவமோ அறிவோ ஒன்றேடொன்று இயைவதில்லை. ஏனெனில், அங்கு பல துறைகள் பரஸ்பரம் தங்களுக்குள்ளும், வாழ்க்கையுடனும், இயைவதற்கான அடிப்படை இல்லை. செயல் என்ற அடிப்படையை நாம் தரும்போது, அந்த இயைபு தானுக ஏற்படுகிறது.

தவிர, செயல் உள்ளத்தைத் தூண்டிவிட்டு ஆராய்ச்சி செய்யும்போது, இவ்வாராய்ச்சி ஒவ்வொரு பாடமாக ஆராய்ந்து கொண்டே விரிந்து செல்லும் ; இப்பழக்கம், ஆராய்ச்சி மனப்பான்மையை நேர்முகமான பொருள் மூலம் வளர்க்கும் ; இதுவே இயைபுமுறைக்குள்ள சிறப்பு.

உழைப்பே ஒப்பற்ற தனிப்பெருங் கல்வி. இயைபு முறை இதிலிருந்து விளைவதே. இயைபுப் போதனை என்பதற்காக எதையும் தொழிலுடன் இயைக்க வேண்டும் என்று எண்ணுவது பிழை. எல்லாப் பாடங்களையும் ஓரளவுக்குத் தொழிலுடனும் இயற்கைச் சூழ் நிலையுடனும் சமூகச் சூழ்நிலையுடனும் இயைத்துக் கற்பிக்க முடியும். முடியாவிட்டால் பாதகமில்லை. வலிந்து ஒவ்வொரு பாடத்தையும் தொழிலுடன் கட்டாயமாக முடிச்சுப் போடவேண்டும் என்றெண்ணுவது சரியாகாது.

## ஆதாரப் பாடசாலை

இங்கு ஆதாரப் பாடசாலை வேலை முறையையும் அதன் பயனையும் நினைவு கூர வேண்டும். பாடசாலையானது ஒழுங்கான அமைப்புடைய ஒரு சிறு சமூகம். ஓரளவு பாதுகாப்புக் குட்பட்டு, குழந்தை தன் சுயேச்சையான வாழ்வு வாழ இங்கு இடம் அளிக்கப் பெறுகிருன். இதுவே பிற்பட்டு அவனுக்குத் தேவையாகக் கூடிய சமூகப் பயிற்சி. இங்கு அவன் வாழும் கலையை வாழ்ந்தே கற்கிருன். ஆசிரியர் மூத்த சகோதரர் போல் உடன் இருந்து உதவுகிருர். தங்கள் விவகாரங்களைப் பிள்ளைகள் தாங்களே

நிர்வகிக்கப் பயிலுகிறார்கள். பிள்ளைகள் சமூகம் ஒரு சுய ஆட்சி ஸ்தாபனமாக இருக்கிறது. மந்திரிசபை முதலிய அமைப்புக்களால், பிள்ளைகள் தயக்கமும் கூச்சமும் நீங்கித் தைரியமாக விவகாரங்களை நடத்தும் ஆற்றல் பெறுகிறார்கள். புறக் கட்டுப்பாடு இல்லாமல் அகக் கட்டுப்பாடு இங்கு வளர்கிறது.

இந்தச் சுய ஆட்சி முறையினால் கிடைக்கும் நன்மைகள் பல. கீழ்ப்படிந்து நடக்கும் பழக்கமும் ஏன் தங்களில் ஒருவருக்குக் கட்டுப்பட வேண்டு மென்ற எண்ணமும் உண்டாகிறது. சமூகத்தினுடைய உயர்ந்த நோக்கத்தைக் கைகூடச் செய்வதில் எல்லோரும் ஒத்துழைக்கிறார்கள். தனிப்பட்ட சிறுவன் சமூகத்துக்குத் தான் செய்யும் கடமை யாது என்று உணர்கிறான். சமூகத்துக்கும் தனிக் குழந்தைக்கும் உள்ள பிணிப்பு, ஜீவன் நிறைந்ததாக ஆகிறது. நீதி உணர்ச்சி ஓங்கி, சொந்த விருப்பு, வெறுப்புக்களை அடக்கி, எல்லோரும் சமூகத்தின் நன்மையை நாடப் பழகுகிறார்கள். தேர்தல் முறையினால் தகுதியை நிர்ணயிக்கும் ஆற்றல் பெறுகிறார்கள். தகுதி தெரியாதபோது துன்பம் அடைகிறார்கள்; இந்த அனுபவம் மேலும் நல்லறிவு கொடுக்கிறது. கட்டுப்பாடு சுயேச்சைக்கு விரோதமானதன்று என்று உணருகிறார்கள். தங்கள் பாடசாலை சிறு பாடசாலையாய் இருந்தாலும், அதைப் போற்றி அதன் புகழைப் பாதுகாப்பதில் பெருமை கொள்ளுகிறார்கள்.

## முடிவுரை

ஆதாரக் கல்வி என்பது, புத்தகத்தை மையமாக வைக்கிற கல்வி முறையன்று; குழந்தையே மையமாக கருதிக் கல்வி வளர்க்கும் முறையாகும். எனவே இது வாழ்க்கையே மையமாகவுடைய கல்வி.

இது தொழிற் கல்வியல்ல; வாழ்க்கையில் பிரதான அங்கம் தொழிலுக்கு உண்டென்பதை ஒப்புக் கொண்டால்தான் சமூகம் உருப்படும். உடலுழைப்புத்தான் கடவுள் வகுத்த நெறி என்பது ஏசுநாதர் போதனை, டால்ஸ்டாயின் மதம்; இது காந்தியத்தின் அடிப்

படைகளில் ஒன்று. இந்த நிலையை ஏற்று, இம் முறையில் கல்விக்குத் தொழில் அடிப்படையாயிருக்கிறது.

இக்கல்வியால் நம் நாட்டில் இன்று காணப்படும் புற அழுக்கு, அசுத்தம் என்பன மறையும். அழுக்கும் அசுத்தமும் மண்ணுடன் சேர்ந்து மட்கினால், நிலத்துக்கு உரம், விளைவு பெருக இது வழி. இதனால், ஊரெங்கும் அழகு குடிகொள்ளும்.

மக்களிடம் நல்ல ஆரோக்கியம் நிலவும். உடல் வலிமையும் ஒளியும் ஓங்கும். சோர்வு நீங்கும். முயற்சியும் முயற்சி தரும் இன்பமும் எங்கும் பெரும் பலன் தரும். நோய்களும் மரண வீதமும் குறையும்.

நாடெங்கும் பயிர்த்தொழில் செம்மையாய் நடக்கும். விளைவு பெருகும். மாடுகள் பெருகி, குழந்தைகளுக்குப் பால் ஏராளமாய்க் கிடைக்கும். ஏழை எனப்படுபவனும் பணக்காரனும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வேண்டிய சீருணவு பெறுவான்.

உடைக்கு வேண்டியன யாவும் இங்கேயே உண்டாகும். எல்லோருக்கும் கௌரவ வாழ்க்கைக்கு அவசிமான உடை இருக்கும்.

எல்லோருக்கும் இதனால் சுதந்திரம் வரும். ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமிரான். ஜீவனோபாயம் எல்லோருக்கும் தெரியும். சுதந்திரமாய் வாழ்வதற்கான துணிவும் தன்னம்பிக்கையும் அஞ்சாமையும் அனைவருக்கும் பிறக்கும்.

எல்லோரும் கடமையை உணர்ந்து செய்து பூரண உரிமை பெறுகிற பிரஜைகளாக வாழ்வார்கள். சாதிமத வேற்றுமைகளும் பிணக்குகளும் அறும். ஆடவனை யொத்த பூரண உரிமைவாழ்வு பெண்ணுக்கும் வரும். தனி மனிதன் தன் நலத்தை ஓரளவு மறந்து, சமூக வாழ்க்கைக்குத் தன் சேவையை மனப் பூர்வமாகத் தருவான்.

அருங்கலைகள் எங்கும் வளரும். கலை—ஓவியம், சிற்பம், இலக்கியம், நடனம் என்பன பெருகும்; நாகரிகமும் பண்பாடும் அனைவரிடமும் பொருந்தும்.

இக்கலைகள் மனிதனுடைய சித்தத்தைத் தூய்மையாக்கி அவனை மேம்படுத்தும். அவனிடம் கடவுட் பக்தி

நிலை பெற்றிருக்கும். அன்பே சிவமாகவும் கடவுளே சத்தியமாகவும் அவன் காண்பான். அவனுடைய நித்திய விவகாரங்களும் சமூகத்தின் பொது விவகாரங்களும் சர்வ தேச விவகாரங்களும் அன்பு சத்தியம் என்ற அடிப்படையில் நிகழும்.

காந்திய ஆதாரக்கல்வி இத்தனையும் செய்யுமென்று எதிர்பார்க்கிறோம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111563
EGMORE, MADRAS-600 008

# மு. அருணாசலம்

## எழுதிய நூல்கள்

### தோட்டவேலை வரிசை

**1. பழத் தோட்டம்** ... ரூ. 10 0

[தோட்டக் கலை, பழத்தோட்டம், கன்று, ஒட்டு முறைகள், எருவிடுதல்; வாழை, மா, தென்னை, நாரத்தை, மற்றப் பழமரங்கள், திராட்சை; நோய், விற்பனை முறை, வற்றல் முறைகள், உணவுச் சத்து, கலைச்சொற்கள் முதலான விஷயங்கள் கொண்டது. 648 பக்கம். 75 படங்கள்.]

இந்திய கவர்னர் ஜெனரலான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர் அவர்கள் இப்புத்தகத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்: "மகிழ்ச்சியுடன் படித்தேன். நல்ல புஸ்தகம். தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற வேண்டும்."

**2. வாழைத் தோட்டம்** ... ரூ. 1 12
கலிக்கா 2 4

[மண் சாரம், கன்று, எருவிடுதல், காய்ப்பு, 25 வாழை வகைகள், உணவுச் சத்து, வாழைநார்த் தொழில் முதலியன விரிவாய்க் கூறும் நூல். 116 பக்கம், கையால் செய்த காகிதம்.]

"வாழையின் என்ஸைக்ளோபீடியா என்று கூறலாம் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்தால் பொது அறிவு வளர உபகாரமாயிருக்கும். ஒவ்வொரு விவசாயியும் கட்டாயம் படித்தல் வேண்டும்"—அகில இந்திய ரேடியோ, திரிசிராப்பள்ளி.

**3. காய்கறித் தோட்டம்** ... ரூ. 5 0

[தோட்ட அமைப்பு, விதைப்பு, நீர்ப்பாசனம், எரு, களை பல இனக் காய்கறிப் பயிர்கள், கொடி, கிழங்கு, கீரை, சீமைக் காய்கறி, நோய், உணவுச் சத்து, கலைச் சொற்கள் முதலிய பகுதிகள் அடங்கியது. 2-ஆம் பதிப்பு, 244 பக்கம், 50 படங்கள்.]

"இதில் ஒரு தாவர சாஸ்திரியின் விஸ்தரிப்பும், ரசாயன சாஸ்திரியின் பாகுபாடும், வியாபாரியின் லாப நஷ்ட நிதானமும், விவசாயியின் முதிர்ந்த அனுபவமும், உணவுச் சத்து நிபுணரின் சிபாரிசும், வைத்தியனின் சிகிச்சை முறையும் காணப்படுகின்றன.

* * சித்திர விளக்கங்களுடன் சோபிக்கும் இப்புத்தகத்தை இக் கலையில் சிரத்தை கொண்ட ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற முடியும். சிரத்தையில்லாதவர்களும் இதைப் படித்த பின்பாவது தோட்ட வேலையை இழிவாகக் கருதாமல் அதை ஒரு கலையாகப் பயின்று வளர்க்கக்கூடும் "—தினமணி 3-8-1945.

"This excellent book on vegetable gardening supplies a long felt want. It is written in simple style and tells an amateur in some detail all about vegetable culture * * * " - K. S. Gopalaswamiengar in the *Hindu*, 27-1-1946.

விஞ்ஞானம்

## 4. உலோகங்களும் நாமும் ... ரூ. 5 0

[உலோகக் கலையும் தொழிலும் பற்றித் தமிழில் வெளிவந்துள்ள ஒரே விஞ்ஞான நூல், 40 உலோகங்களைப் பற்றிய விளக்கமான செய்திகள், உலோகம் எடுக்கும் விதம், உபயோகம், தொழில் நுட்பம், எஃகுத் தொழில் பற்றிய விரிவான விளக்கம், கலப்பு லோகம், வார்ப்பு இணைப்பு முறைகள், பொடிவேலை, இந்தியச் சுரங்கச் செல்வம், கலைச் சொற்கள் முதலியன விரிவாய்க் கூறுவது. 292 பக்கம். அனேக படங்கள்.]

" சாதாரணமாய்ப் படிக்கத் தெரிந்தோருக்குக் கூட நன்குக விளங்கும்படி ஆசிரியர் தெளிவாய் எழுதி யிருக்கிறார். பொது அறிவை விருத்தி செய்துகொள்வதற்காகத் தமிழர் படிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று "—தினமணி 11-10-1947.

"This maiden attempt in Tamil on metals and their utilisation is to be welcomed in these days when the lay public of India have begun to take a keen interest in the mineral resources of the land, their proper utilisation and devolopment. It has helped to fill a longfelt want for a book on this subject for the particular use of the Tamil knowing industrialists and financiers. The author and the publishers have to be congratulated on their pioneer effort in bringing out this useful compilation. *. * * " - *Triveni* for November 1948.

**5. இரசாயனமும் நாமும் ... (அச்சில்)**

[இரசாயனமும் மக்கள் வாழ்க்கையின் வெவ்வேறு துறைகளும் பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுதி.]

மொழி பெயர்ப்பு

**6. உழைப்பின் தத்துவம் ... ரூ. 1 4**

[ஜே. ஸி. குமரப்பா எழுதியது; உழைப்பின் தத்துவம், முன்னேற்றத்தின் தத்துவம், காந்தியப் பொருளாதாரம் என்ற மூன்று அரிய கட்டுரைகள் கொண்டது.]

**7. கிராம நிர்மாணத் திட்டம் ரூ. 0 8**

[ஜே. ஸி. குமரப்பா எழுதியது. தமிழில் சென்னை அரசாங்கத்தார் வெளியிட்டது.]

**8. சுயராஜ்ய சாஸ்திரம் .... ரூ. 2 0**

[வினோபா பாவே எழுதியது. புதுமைப் பதிப்பக வெளியீடு.]

சமூகம்

**9. உணவுப் பஞ்சம் ... ரூ. 1 8**

[1945 இல் தமிழ் நாட்டில் உணவுப் பஞ்சம் வருமென்றிருந்த அச்சத்தை வைத்தெழுதிய சிறுபுத்தகம். பஞ்சத்தின் காரணங்கள், உணவுப்பொருள் நாசம், அரசியலும் உணவும், அட்வைசர் ராஜ்யம், நெல்விலை, நீர்வசதி, சாகுபடிச்செலவு, உழவு மாட்டுப் பாதுகாப்பு, கைக்குத்தல் அரிசி, உற்பத்திப் பெருக்கம், நம் கடமை, ஆடு மாடுகளின் தீனிப் பஞ்சம், பசு பாலனமும் பால் பெருக்கமும் என்ற பொருள்களை நுணுகி ஆராய்வது. கருத்து நிறைந்த நூல். 120 பக்கம்.]

**10. ஆதாரக்கல்வி என்றால் என்ன ? ரூ. 0 6**

[வர்தாக் கல்வி என்றும் காந்தியக் கல்வி என்றும் சொல்கிற கல்வி முறையின் தத்துவத்தைச் சுருக்கிக் கூறுவது.]

**11. வயது வந்தோர் கல்வி ....** (அச்சில்)

[எழுத்துப் படிப்புக் கல்வியாகாது என்று காந்தியடிகள் சொல்வார். முதியோர் கல்வி என்று சொல்கிற இக் கல்வியின் தத்துவம் கல்வி வேலை முறை முதலியவற்றைச் சமூக சாஸ்திர ரீதியாக விளக்குவது.]

## இலக்கியப் பதிப்பு

**12. அம்பிகாபதி கோவை ....** ரூ. 4 0

[569 செய்யுட்களுடைய பழந்தமிழ் நூல். மிக விரிந்த ஆராய்ச்சி முன்னுரை முதலியவற்றுடன். 336 பக்கம்.]

**13. முக்கூடற் பள்ளு ...** ரூ. 2 4

கலிக்கா 3 0

[2ஆம் பதிப்பு. திருகோட்டியூர்ப் பள்ளு, மன்னார் மோகனப் பள்ளு, திருநீலகண்டன் பள்ளு முதலியனவும் சேர்ந்தது. 200 பக்கம்.]

"முன்னுரை, பள்ளுப் பிரபந்தத்தைப் பற்றி அனேக விஷயங்களை மிச்சமே இல்லை என்று சொல்லும்படி விளக்குகிறது * * * அனேக பாடல்கள் வாய்ப்பாய் அமைந்திருக்கின்றன. நாம் நன்றாய் அனுபவிக்க வேண்டிய பாடல்கள்"—டி. கே. சிதம்பரநாத முதலியார்.

**14. திருமலை முருகன் பள்ளு ...** ரூ. 2 0

[அழகான 182 பாடல் கொண்ட பழந்தமிழ் நூல். குறிப்புரையுடன், 152 பக்கம்.]

**15. திரு ஆனைக்காவுலா ...** ரூ. 2 8

[காளமேகப் புலவர் பாடியது. விரிவான ஆராய்ச்சி முன்னுரை முதலியவற்றுடன்.]

**16. சிதம்பரக் குறவஞ்சி** (அச்சில்) ரூ. 0 12

[3, 4, 9, 14 எண்ணுள்ளவை சக்தி வெளியீடு.]

கிடைக்குமிடம் :

| | |
|---|---|
| ஆசிரியர், | தமிழ் நூலகம் |
| கீழமூங்கிலடி | 3, சாம்பசிவம் தெரு |
| சிதம்பரம் | தியாகராயநகர் |
| | சென்னை 17. |

சாது அச்சுக்கூடம், சென்னை

# ஆதாரக்கல்விக்கு வேண்டிய புத்தகங்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| ஆதாரக்கல்வி என்றால் என்ன ? | ... | 1 | 0 |
| முதல் வகுப்பு ஆசிரியர் | ... | 1 | 8 |
| சிறுவர்க்கான பாடல் | ... | 0 | 6 |
| வாழ்க்கைக்கான கல்வி | ... | 0 | 5 |
| இன்றைய பேச்சு-ஆதாரக்கல்வி (ஆசாரிய கிருபலானி) | | 2 | 0 |
| நமக்கேற்ற உணவு (டாக்டர் குருபாதம்) | ... | 0 | 10 |
| கிராம நிர்மாணத் திட்டம் (குமரப்பா) | ... | 0 | 8 |
| நிர்மாணத் திட்டம் (மகாத்மா காந்தி, ராஜன்பாபு) | ... | 0 | 14 |
| பூரண சுதேசி (மகாத்மா காந்தி) | ... | 1 | 0 |
| ஆசிரம வாழ்க்கை ,, | ... | 1 | 4 |
| ராட்டை தத்துவ விளக்கம் ,, | ... | 1 | 4 |
| சர்வோதயம் ,, | ... | 0 | 10 |
| சுயராஜ்ய சாஸ்திரம் (விநோபா பாவே) | ... | 2 | 0 |
| ஆதாரத் தொழில் - நூற்றல் ,, | ... | 1 | .0 |
| வாழைத் தோட்டம் | ... | 1 | 12 |
| பழத் தோட்டம் | ... | 10 | 0 |
| காந்திய நவநீதம் (மஷ்ருவாலா) | ... | 2 | 0 |
| ராட்டைப் புரட்சி | ... | 0 | 6 |
| தக்கிளியால் நூற்பதெப்படி ? | ... | 0 | 8 |
| பட்டை போடச் சுலபவழி | ... | 0 | 6 |
| நூற்புக் கணிதம்—1 | ... | 0 | 6 |
| ,, 2 | ... | 0 | 12 |
| ,, 3 | ... | 0 | 14 |
| ,, 4 | ... | 1 | 0 |
| நூற்புக் கலையின் நுணுக்கங்கள் | ... | 1 | 0 |
| கிஸான், பெட்டி, ஈரிழை ராட்டை | ... | 1. | 0 |
| கைராட்டை - அதன் சரித்திரமும் புத்துயிரும் | ... | 1 | 8 |
| மலஜல சுத்தி | ... | 0 | 8 |
| துப்புரவு விஞ்ஞானம் | ... | 0 | 12 |
| சுயம்பூரண கிராமம் | ... | 0 | 6 |

---

**காந்தி வித்தியாலயம்**

திருச்சிற்றம்பலம் – மரத்துறை P. O.

குத்தாலம் வழி, தஞ்சை ஜில்லா